தினகனி

செய்திகள் மற்றும் விளம்பரங்கள்

தொடர்புக்கு:
94436 99066

dinakani2023@gmail.com

RNI-TNTAM/2023/88253

நமது
# தினகனி
NAMADHU DHINA KANI

www.dhinakani.com

காலை நாளிதழ்




| Vol: 02 | Issue: 257 | 4 Pages | 15.4.2025 | Tuesday | Price Rs. 6 | Annual Subscription Rs: 1825 |
|---|---|---|---|---|---|---|
| மலர்: 02 | இதழ்: 257 | 4 பக்கங்கள் | 15.4.2025 | செவ்வாய்க்கிழமை | விலை ரூ.6 | வருட சந்தா ரூ.1825 |



**வேண்டிய வேண்டியாங் கெய்தலால் செய்தவம்**
**ஈண்டு முயலப் படும்**

**விளக்கம்:**
விரும்பிய பயன்களை விரும்பியவாறே அடைய முடியுமாகையால் செய்யத்தக்க தவம் இந்நிலையிலும் (இல்லற வாழ்க்கையிலும்) முயன்று செய்யப்படும்.

# பாபாசாகேப் விரும்பிய சமத்துவ இந்தியாவை கண்டே தீருவோம்: முதலமைச்சர் உறுதி



சென்னை ஏப்.15

அம்பேத்கரின் 135வது பிறந்தநாள் நாடு முழுவதும் இன்று கொண்டாடப்பட்டு வருகிறது. அம்பேத்கரின் பிறந்தநாளை முன்னிட்டு சென்னை ராஜா அண்ணாமலைபுரத்தில் உள்ள அம்பேத்கர் மணிமண்டபத்தில் உள்ள அவரது படத்துக்கு முதல் அமைச்சர் மு.க.ஸ்டாலின் மலர்துாவி மரியாதை செலுத்தினார்.

இந்த நிலையில் அம்பேத்கரின் பிறந்தநாளை முன்னிட்டு எக்ஸ் தளத்தில் முதல்அமைச்சர் மு.க.ஸ்டாலின் வெளியிட்டுள்ள பதிவில் தெரிவித்திருப்பதாவது:

சாதி எனும் ஆயிரமாண்டு அழுக்கினை அறிவெனும் தீப்பந்தம் கொண்டு பொசுக்கிய புரட்சியாளர் தனக்குவமை இல்லாத புத்துலகப் புத்தர் சட்ட மாமேதை அம்பேத்கர் பிறந்தநாள்... சமத்துவ நாள்! ஒடுக்கப்பட்ட, பிற்படுத்தப்பட்ட மக்களின் உரிமைகளை வென்றெடுக்கும் நம் பயணத்தில் என்றும் நம்மை வழிநடத்தும் அறிவுலகச் சூரியன் அம்பேத்கர் வாழ்க!

'எல்லார்க்கும் எல்லாம்' என்ற இலக்கை நோக்கிய நமது திராவிட மாடல் பயணத்தில், பாபாசாகேப் விரும்பிய சமத்துவ இந்தியாவைகண்டே தீருவோம்!ஜெய்பீம்! இவ்வாறு அதில் தெரிவித்துள்ளார்.

# 5 வயது சிறுமியை கற்பழித்து கொன்ற கொடூர வாலிபர்.. என்கவுண்ட்டரில் சுட்டுக்கொலை



பெங்களூரு, ஏப்.15

கர்நாடக மாநிலம் கொப்பல் மாவட்டம் யாதவாடா பகுதியை சேர்ந்த தம்பதி, தார்வார் மாவட்டம் உப்பள்ளி பகுதியில் வசித்து வந்தனர். இந்த தம்பதிக்கு 5வயதில்மகள்இருந்தாள். இந்த சூழலில், சம்பவம் நடந்த அன்று சிறுமி வீட்டின் வெளியே விளையாடிக்கொண்டிருந்தாள். சிறிது நேரம் கழித்து சிறுமியின்தாய் வெளியே வந்து பார்த்தபோது அங்கு சிறுமி இல்லை. இதனால் அதிர்ச்சி அடைந்த அவர், தனது மகளை பல இடங்களில் தேடினார். அப்போது அங்குள்ள பாழடைந்த வீட்டின் கழிவறையில் உடலில் காயங்களுடன் சிறுமி பிணமாக கிடந்தது தெரியவந்தது.

இதுகுறித்து போலீசார் நடத்திய விசாரணையில், வீட்டின் முன்பு விளையாடிக்கொண்டிருந்த சிறுமியை மர்மநபர் கடத்தி சென்று கற்பழித்து கொன்றது தெரியவந்தது.

சம்பவம் நடந்த இடத்தில் உள்ள கண்காணிப்பு கேமராவில் பதிவான காட்சிகளின் அடிப்படையில் வாலிபர் ஒருவரை நேற்று மதியம் போலீசார் கைது செய்தனர். விசாரணையில் அவர், பீகார் மாநிலம் பாட்னாவை சேர்ந்த கூலி தொழிலாளி ரித்தேஷ் குமார் (வயது 35) என்பது தெரியவந்தது. வீட்டின் முன்பு விளையாடிக் கொண்டிருந்த 5 வயது சிறுமியிடம் சாக்லெட் கொடுப்பதாக கூறி கடத்தி சென்று கற்பழித்து கழுத்தை நெரித்து கொலை செய்ததை ரித்தேஷ் குமார் ஒப்புக்கொண்டார்.

இதையடுத்து போலீசார், அவர் தங்கியிருந்த இடத்துக்கு அழைத்து சென்று விசாரணை நடத்த முடிவு செய்தனர். அதன்படி அசோக்நகர் போலீஸ் சப் இன்ஸ்பெக்டர் அன்னப்பூர்ணா மற்றும் போலீசார், ரித்தேஷ் குமாரை அழைத்து கொண்டு அவர் தங்கியிருந்த இடத்துக்கு சென்றனர். அங்கு வைத்து திடீரென்று கீழே கிடந்த கற்களை எடுத்து போலீசார் மீது வீசி ரித்தேஷ் குமார் தாக்குதல் நடத்தினார். இதில், போலீஸ் சப்இன்ஸ்பெக்டர் அன்னப்பூர்ணா, 2 போலீசார் காயம் அடைந்தனர்.

அப்போது சப்இன்ஸ்பெக்டர் அன்னப்பூர்ணா தன்னிடம் இருந்த துப்பாக்கியை எடுத்து தற்காப்புக்காக ரித்தேஷ் குமாரை நோக்கி சுட்டார். இதில் ரித்தேஷ் குமாரின் மார்பில் குண்டு பாய்ந்து உயிரிழந்தார். இந்த சம்பவம் அந்த பகுதியில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தி இருந்தது.

# ஆட்சியில் பங்கு என்பதை பற்றி இப்போது பேச முடியாது ; தமிழக பா.ஜ.க. தலைவர் நயினார் நாகேந்திரன்

திருநெல்வேலி ஏப்.15

தமிழக சட்டசபை தேர்தல் அடுத்த ஆண்டு நடைபெற உள்ளது. தேர்தலுக்கு இன்னும் ஓராண்டு உள்ள நிலையில் தமிழக அரசியல் களம் தற்போதே சூடுபிடித்துவிட்டது. அந்த வகையில் அ.தி.மு.க., பா.ஜ.க. இடையே கூட்டணி உறுதியாகியுள்ளது. எடப்பாடி பழனிசாமி தலைமையில் இந்த கூட்டணி தேர்தலை சந்திக்கிறது.

அதேவேளை, தமிழக பா.ஜ.க. தலைவராக நயினார் நாகேந்திரன் பொறுப்பேற்றுள்ளார். அவர் நெல்லையில் இன்று செய்தியாளர்களை சந்தித்தார். அப்போது அவர் பேசியதாவது,




அ.தி.மு.க.வுக்கும், பா.ஜ.க.வுக்கும் இடையே நீண்ட இழுபறிக்குப்பின் கூட்டணி அமையவில்லை. ஏற்கனவே உள்துறை மந்திரி அமித்ஷாவும், அ.தி.மு.க. பொதுச்செயலாளர் எடப்பாடி பழனிசாமியும் பேசியுள்ளனர். அன்றே செய்தியாளர்கள் சந்திப்பு வைத்து கூட்டணி குறித்து அறிவித்துவிட்டோம். ஆகையால், நீண்ட இழுபறிக்கு இங்கு இடமில்லை.

ஆட்சியிலும் பங்கு, அதிகாரத்திலும் பங்கு, துணை முதல்மந்திரி பதவி என்பது குறித்த இப்போது பேச முடியாது. தமிழகத்தில் தேசிய கூட்டணி அமையும். அதன் தலைவராக தமிழ்நாட்டில் எடப்பாடி பழனிசாமி செயல்படுவார். நெல்லையில் மீண்டும் போட்டியிடுவது குறித்து அகில இந்திய தலைமைதான் முடிவு செய்யும். தேர்தலுக்கு இன்னும் ஓராண்டு உள்ளது. தேசிய ஜனநாயக கூட்டணிக்குத்தான் மக்கள் வாக்களிக்கப் போகிறார்கள் என்பது வெட்டவெளிச்சமாகி உள்ளது' என்றார்.

# கர்நாடகாவில் லாரிகள் வேலை நிறுத்தம்

பெங்களூரு, ஏப்.15

கர்நாடகா மாநிலம் பெங்களூருவில் கடந்த 6ந்தேதி லாரி உரிமையாளர்கள் சங்க தலைவர் சண்முகப்பா தலைமையில் லாரி உரிமையாளர்கள் சங்க நிர்வாகிகளின் ஆலோசனை கூட்டம் நடைபெற்றது.

இந்தகூட்டத்தில்சங்கநிர்வாகிகள்பேசுகையில், கர்நாடகத்தில். 1ந்தேதியில் இருந்தே சுங்க கட்டணமும் உயர்த்தப்பட்டுள்ளது. ஏற்கனவே லாரிகளுக்கான டயர்கள், பிற உதிரி பாகங்கள் விலை, காப்பீட்டு கட்டணம் உள்ளிட்டவையும் அதிகரிக்கப்பட்டு இருக்கிறது. இதுபோன்ற காரணங்களால் தினம், தினம் லாரிகளை பராமரித்து இயக்குவதே உரிமையாளர்களுக்கு மிகப்பெரிய சவாலாக மாறியுள்ளது.

இதனை நம்பி வாழ்க்கை நடத்தும் லாரி உரிமையாளர்கள், டிரைவர்கள், கிளீனர்களின் வாழ்க்கை கேள்வி குறியாகி உள்ளது. அதனால் தான் டீசல் விலை, சுங்க கட்டண உயர்வை திரும்ப பெற வேண்டும் என்று வருகிற 14ந்தேதிக்குள் (இன்று) கர்நாடக அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும், இல்லையெனில் 14ந்தேதி நள்ளிரவு முதல் லாரிகள் காலவரையற்ற போராட்டம் நடத்தப்படும் என்று அறிவித்தனர்.

இதனால் தமிழ்நாடு, கேரளா உள்பட வெளிமாநில லாரிகளும் வராது. லாரிகள் உரிமையாளர்கள் சங்கத்தினரின் கோரிக்கையை நேற்று வரை கர்நாடக அரசு பரிசீலிக்கவில்லை. இதனால் திட்டமிட்டப்படி இன்று (திங்கட்கிழமை) நள்ளிரவு முதல் காலவரையற்ற வேலை நிறுத்த போராட்டம் தொடங்குவதாக கர்நாடக லாரி உரிமையாளர்கள் சங்கத்தினர் அறிவித்துள்ளனர். லாரி உரிமையாளர்கள் போராட்டம் நடைபெற உள்ளதால் மாநிலத்தில் காய்கறிகள் உள்ளிட்ட அத்தியாவசிய பொருட்களின் விலை உயரும் அபாயம் ஏற்பட்டுள்ளது.





மாண்புமிகு தமிழக முதல்வர் தளபதியார் அவர்களின் பொற்கரங்களால் காணொளி வாயிலாக திறந்து வைக்கப்பட்ட பேரறிஞர் அண்ணா தினசரி காய்கறி மார்க்கெட் இன்று மக்களின் பயன்பாட்டிற்கு வந்தது இதனை மாண்புமிகு கூட்டுறவுத்துறை அமைச்சர் அண்ணன் கே ஆர் பெரிய கருப்பன் அவர்கள் மாண்புமிகு நகர்புற வளர்ச்சி துறை அமைச்சர் அண்ணன் கே என் நேரு அவர்கள் ஆலோசனையின் படியும் மானமிகு முன்னாள் அமைச்சர் அண்ணன் மூ தென்னவன் அவர்களின் வழிகாட்டுதலின் படி செயல்படும் மாண்புமிகு மேயர் அண்ணன் சே. முத்துத்துரை அவர்கள் நேரில் சென்று பார்வையிட்டு ஆய்வு செய்த பொழுது உடன் மரியாதைக்குரிய மாமன்ற உறுப்பினர் சோனா கண்ணன் அவர்கள் மாவட்ட பிரதிநிதி ஜான் கென்னடி அவர்கள் மாவட்ட தொண்டரணி துணை அமைப்பாளர் அண்ணன் முருகேசன் அவர்கள் மற்றும் வியாபாரிகள் பொதுமக்கள் கலந்து கொண்டனர்

# அண்ணல் அம்பேத்கர் பிறந்த நாள் சமத்துவ நாள் விழாவை முன்னிட்டு மதுரை அமெரிக்கன் கல்லூரியில் நடைபெற்ற நிகழ்ச்சி

அண்ணல் அம்பேத்கர் அவர்களின் பிறந்த நாள் சமத்துவ நாள் விழாவை முன்னிட்டு மதுரை அமெரிக்கன் கல்லூரியில் நடைபெற்ற நிகழ்ச்சியில் மாண்புமிகு வணிகவரி மற்றும் பதிவுத்துறை அமைச்சர் திரு.பி.மூர்த்தி அவர்கள் மாண்புமிகு தகவல் தொழில்நுட்பவியல் மற்றும் டிஜிட்டல் சேவைகள் துறை அமைச்சர் முனைவர் பழனிவேல் தியாகராஜன் அவர்கள் ஆகியோர் பங்கேற்று பல்வேறு அரசுத் துறைகளின் சார்பாக 1164 பயனாளிகளுக்கு ரூ.8.27 கோடி மதிப்பீட்டில் அரசு நலத்திட்ட உதவிகளை



வழங்கினார்கள்.

இவ்விழாவில் மாவட்ட ஆட்சித் தலைவர் திருமதி. மா. செள. சங்கீதா, இ.ஆ.ப., அவர்கள், மாநகராட்சி ஆணையாளர் திருமதி.சித்ரா விஜயன், இ.ஆ.ப., அவர்கள், மதுரை தெற்கு சட்டமன்ற உறுப்பினர் திரு.மு.பூமிநாதன் அவர்கள், மாவட்ட வருவாய் அலுவலர் திரு.க.அன்பழகன் அவர்கள், மாநகராட்சி மண்டல தலைவர் திருமதி. சரவண புவனேஸ்வரி அவர்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.



அமமுக. அமமுக சார்பில் அம்பேத்கார் சிலைக்கு ஒன்றியசெயலாளர் நேத்தபாக்கம் சரவணன்தலைமையில்மாலைஅணிவித்துஅனைவருக்கும்இனிப்புகள்வழங்கப்பட்டது. இதில் நகரசெயாளர் பன்னீர்செல்வம், மேற்குஆரணி ஒன்றியசெயலாளர் புருஷோத்தமன், நி்ரவாகிகள் நரேஷ், ராஜா, சீனிவாசன் உள்ளிட்டோர் கலந்துகொண்டனர்.

# திருப்பதி: தலைமுடி காணிக்கை செலுத்திய பவன் கல்யாண் மனைவி



திருப்பதி, ஏப்.15

ஆந்திர மாநில துணை முதல் மந்திரி பவன் கல்யாண் 2013ம் ஆண்டில் ரஷியாவைச் சேர்ந்த நடிகை அன்னா லெஜினோவாவை திருமணம் செய்தார். இவர்களுக்கு ஒரு மகள் ஒரு மகன் உள்ளனர். மகன் மார்க் ஷங்கர் (7) சிங்கப்பூரில் உள்ள தனியார் பள்ளியில் கோடை விடுமுறை பயிற்சி வகுப்புக்காக சென்றிருந்தார்.

கடந்த 8 ம்தேதி பயிற்சி முகாம் நடந்த அறையில் திடீரென தீ விபத்து ஏற்பட்டது. மின்கசிவால் ஏற்பட்ட தீ விபத்தில் மார்க் சங்கருக்கு கை மற்றும் காலில் பலத்த காயம் ஏற்பட்டது. அதிர்ஷ்டவசமாக அவன் உயிர் தப்பினான். அவன் அருகில் இருந்த சிறுமி பரிதாபமாக உயிரிழந்தார்.

15 மாணவ, மாணவிகள் காயமடைந்தனர். தீ விபத்தால் அறை முழுவதும் புகை மண்டலமானது. அதை மார்க் சங்கர் சுவாசித்ததால் நுரையீரலிலும் பாதிப்பு ஏற்பட்டது. உடனடியாக சிங்கப்பூரிலுள்ள மருத்துவமனையில் மார்க் சங்கர் அட்மிட் செய்யப்பட்டான். தற்போது சிகிச்சை முடிந்து வீடு திரும்பியுள்ளான்.

இந்நிலையில்அவன்உடல்நலன்தேறினால்முடிகாணிக்கைசெலுத்துவதாக அண்ணா லெஜினோவா முடிவு செய்துள்ளார். அதன்படி நேற்று முடி காணிக்கைசெலுத்தினார்.இதற்காகநேற்றுதிருப்பதிதிருமலைஏழுமலையான் கோவிலுக்கு அவர் வந்தார்.

அவரை தேவஸ்தான அதிகாரிகள் வரவேற்றனர். அவர் கிறிஸ்தவர் என்பதால் அதற்கான விசேஷ படிவத்தில் கையெழுத்து பெற்றனர். பின்னர் அன்னா லெஜினோவா, கோவிலில் தலைமுடி காணிக்கை செலுத்தினார். விருந்தினர் மாளிகையில் ஓய்வு எடுத்த அவர், இன்று (திங்கட்கிழமை) வி.ஐ.பி. தரிசனத்தின்போது திருப்பதி ஏழுமலையானை தரிசனம் செய்கிறார்.

# ஊடக கனி நல சங்கத்தின் முதலாமாண்டு துவக்க விழாவும் தமிழ் புத்தாண்டையும் சிறப்பாக கொண்டாடப்பட்டது







ஊடக கனி நல சங்கத்தின் கோல்டன் நகரில் உள்ள அலுவலகத்தில் விழாக் கோலம் கொண்டது சுமார் 50க்கும் மேற்பட்ட பத்திரிக்கையாளர்களும் நம்முடைய சங்கத்தின் உறவுகளுமாகிய அனைவரும் கலந்து கொண்டனர் இக் கூட்டம் மாநிலத் தலைவர் திரு.கனி ராஜ் அவர்கள் தலைமையில் நடைபெற்றது மாநில துணைத்தலைவர் மற்றும் பொருளாளர் அவர்களும் கலந்து கொண்டார்கள் முதலாவதாக திருப்பூர் மாவட்டத் தலைவர் திரு லாரன்ஸ் அவர்கள் வாழ்த்துரை கூறி கூட்டம் ஆரம்பிக்கப்பட்டது வந்திருந்த பொறுப்பாளர்கள் மற்றும் உறுப்பினர்கள் அனைவருக்கும் தங்களுடைய கருத்துக்களை கூற வாய்ப்புகள் கொடுக்கப்பட்டது

அனைவரும் தங்களுடைய கருத்துக்களை தெரிவித்தார்கள் அதன் பிறகு திருப்பூர் மாவட்டத்தில் பொறுப்பாளர்கள் தேர்வு செய்து பொறுப்புகளை மாநில தலைவர் மற்றும் துணைத் தலைவர் அவர்கள் அறிவித்தார்கள் பொறுப்பேற்ற அனைவருக்கும் சால்வை போட்டு மரியாதை செலுத்தப்பட்டது பின்னர் மாநிலத் தலைவர் அவர்கள் பேசுகையில் பொறுப்பேற்ற அனைவருக்கும் வாழ்த்து கூறி சில அறிவுரைகளும் வழங்கினார்கள் மூன்று மணி நேரம் கூட்டம் நடைபெற்றது அனைவரும் மகிழ்ச்சியோடு கலைந்து சென்றனர்



## பொன்முடியை அமைச்சர் பதவியில் இருந்து நீக்க வேண்டும்: மதுரை ஆதீனம்





மதுரை, ஏப்.15

மதுரை ஆதீனம் ஹரிஹர தேசிக ஞானசம்பந்த பரமாச்சாரிய சுவாமி செய்தியாளர்கள் சந்திப்பில் கூறியதாவது:

மறைந்த முன்னாள் முதல்அமைச்சர் கருணாநிதி சைவ சமயத்தின் மீதும், திருமுறைகள் மீதும் மிகுந்த பற்றுக் கொண்டவர். திருமுறைகளை பாடும் ஓதுவா மூர்த்திகளை எப்போதும் பாராட்டும் வழக்கம் கொண்டவர். இந்த நிலையில் அமைச்சர் பொன்முடி, சைவ சமயத்தை இழிவுபடுத்தும் வகையில் பேசியிருப்பது கடும் கண்டனத்துக்குரியது. அவரது முறையற்ற பேச்சு குறித்து தகவலறிந்தவுடன் பொன்முடியைகட்சிபொறுப்பில் இருந்து முதல்அமைச்சர் நீக்கியது பாராட்டுக்குரியது. மேலும் பொன்முடியை அமைச்சர் பதவியில் இருந்தும் நீக்க வேண்டும்.

ஒரு சமயத்தை உயர்த்தியும், ஒரு சமயத்தை தாழ்த்தியும் பேசுவது சில அமைச்சர்களுக்கு வாடிக்கையாக உள்ளது. ரகசிய காப்பு பிரமாணம் ஏற்ற அமைச்சர்கள் அனைவரும், அனைத்து சமயத்தவருக்கும் பொதுவானவர்களாகவே இருக்க வேண்டும்.

எனவே, அனைத்து அமைச்சர்களையும் அழைத்து எந்த சமயத்தையும் புண்படுத்தும் வகையில் பேசக்கூடாது எனமுதல்அமைச்சர்கண்டிக்க வேண்டும்.

திமுகவின் பேச்சாளர்கள் சிலரும் முறையற்ற வகையில் பேசுகின்றனர். அவர்களையும் கண்டித்து எச்சரிக்க வேண்டும். தமிழக பாஜக தலைவராக பொறுப்பேற்றுள்ள நயினார் நாகேந்திரனுக்கும், பாஜக தலைவராக இருந்து திறம்பட செயல்பட்டு, கட்சியை வளர்ச்சி பாதைக்கு கொண்டு சென்ற அண்ணாமலைக்கும் பாராட்டுகள், வாழ்த்துகள்.

இவ்வாறு அவர் கூறினார்.

## சிவகங்கை மாவட்ட திமுக கலை இலக்கிய பகுத்தறிவு பேரவை சார்பில் மாபெரும் நீர்மோர் பந்தல் திறப்பு



சிவகங்கை மாவட்ட திமுக கலை இலக்கிய பகுத்தறிவு பேரவை சார்பில் மாபெரும் நீர்மோர் பந்தல் திறப்பு அமைச்சர் கேஆர்.பெரியகருப்பன் திறந்து வைத்தார்.

சிவகங்கை மாவட்ட திமுக செயலாளர் மாண்புமிகு தமிழ்நாடு கூட்டுறவுத்துறை அமைச்சர் கேஆர். பெரியகருப்பன் அவர்களின் ஆலோசனையின் பேரில் சிவகங்கை மாவட்ட திமுக கலை இலக்கிய பகுத்தறிவு பேரவையின் சார்பில் பொதுமக்களின் தாகத்தை தீர்த்திடும் வகையில் நீர்மோர் பந்தலை மாண்புமிகு அமைச்சர் கேஆர். பெரியகருப்பன் திறந்து வைத்தார்..

மாவட்ட துணைத்தலைவர் காரை சுரேசு ஏற்பாட்டிலும் மாவட்ட தலைவர் தொழிலதிபர் திருப்புவனம் திருநாவுக்கரசு, மாவட்ட அமைப்பாளர் இடைக்காட்டூர் ஊராட்சி மேனாள் தலைவர் ஆ.மு. சண்முகநாதன், மாவட்டதுணைஅமைப்பாளர்களான கானாடு காத்தான்சேர்மன்ராதிகா, நாகவயல் இராஜேந்திரன், காளாப்பூர் செல்வக்குமார், தேவகோட்டை அபி என்ற ஆபிரகாம், காளையார்கோவில் குரு. போஸ், புளியால் சுரேஷ் குமார் ஆகியோர் முன்னிலையிலும் நடைபெற்ற இந்த நிகழ்ச்சியில் மேனாள் அமைச்சர் முகவை தென்னவன், மாவட்ட துணைச்செயலாளர் சேர்மன் சேங்கைமாறன், திமேக தலைமைப் பொதுக்குழு உறுப்பினர்கள் பள்ளத்தூர் கே. எஸ். ரவி, மாமன்ற உறுப்பினர் தெய்வானை இளமாறன் ஒன்றியக்கழக செயலாளர் கோட்டையூர் டாக்டர் ஆனந்த், வணக்கத்திற்குரிய மேயர் முத்துத்துரை, துணை மேயர் நா. குணசேகரன், மாவட்ட ஐடி விங் அமைப்பாளர் பிரின்ஸ் சசிவர்ணம் ஆகியோர் கலந்து கொண்டனர்..

இந்த நிகழ்ச்சியில் அவைத்தலைவர் சண்சுப்பையா, மாநகர்திமுக துணைச்செயலாளர் லெட்சுமி ராஜ்கணேஷ், இளநீர் கடை சண்முகம், மாமன்ற உறுப்பினர்கள், முனைவர் கலா காசிநாதன், தனம் சிங்கமுத்து, சித்திக், திவ்யா காரை சக்தி, மாணவரணி கதிர். இராஜ்குமார், விளையாட்டு அணி கே. எஸ். நாராயணன், ருக்மா சரவணன், ஐடி விங் மெ. காளிமுத்து, சிறுபான்மை சேவியர், உள்ளிட்ட கழக நிர்வாகிகள் ஏராளமானோர் கலந்துகொண்டனர்..

## சென்னை கலைவாணர் அரங்கில் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை சார்பில் நலத்திட்ட உதவிகள் வழங்கும் விழா



சென்னை கலைவாணர் அரங்கில் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை சார்பில் அண்ணல் அம்பேத்கர் அவர்களின் 135 ஆவது பிறந்தநாள் (சமத்துவ நாள்) தினத்தை முன்னிட்டு நலத்திட்ட உதவிகள் வழங்கும் விழா மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் அவர்கள் தலைமையில் நடைபெற்றதைத் தொடர்ந்து தென்காசி இ.சி.ஈ.அரசு ஆண்கள் மேல்நிலைப் பள்ளியில் இன்று (14.04.2025) நடைபெற்ற சமத்துவ நாள்தின விழாவில், தென்காசி நாடாளுமன்ற உறுப்பினர் திருமதி.மரு.ராணி ஸ்ரீகுமார்அவர்கள். தென்காசி சட்டமன்ற உறுப்பினர் திரு.எஸ்.பழனிநாடார் அவர்கள். சங்கரன்கோவில் சட்டமன்ற உறுப்பினர் திரு.ஈ.ராஜா அவர்கள், வாசுதேவநல்லூர் சட்டமன்ற உறுப்பினர் திரு.மரு.சதன்திருமலைக்குமார் அவர்கள் ஆகியோர் முன்னிலையில்மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.ஏ.கே.கமல்கிஷோர், இ.ஆ.ப. அவர்கள் பயனாளிகளுக்கு நலத்திட்ட உதவிகளை வழங்கினார்கள். பின்னர் மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.ஏ.கே. கமல்கிஷோர், இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்ததாவது.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறையினருக்கென பல்வேறு திட்டங்களை அறிவித்து செயல்படுத்தி வருகிறார்கள். அதனடிப்படையில் இன்றைய தினம் தென்காசி மாவட்டத்தில் ஆதி திராவிடர் நலத்துறையின் மூலம் 12 பயனாளிகளுக்கு ரூ.80.280/ மதிப்பிலான இலவச தையல் இயந்திரங்களும், 04 பயனாளிகளுக்கு ரூ.29.120/ மதிப்பிலான தேய்ப்பு பெட்டிகளும், தாட்கோ மூலம் 5.11,42,088/ or Load Vehicled, Embroidery and tailoring. Tourister Vehicles, Auto Passenger, Browsing Center ஆணைகளும், வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத்துறை மூலம் 243 பயனாளிகளுக்கு ரூ.2,48,40,000/ மதிப்பிலான வீட்டுமனைப் பட்டாக்களும், தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கம் (மகளிர் திட்டம்) TN SRLM மூலம் 188 பயனாளிகளுக்கு ரூ.1.14,60,000/ மதிப்பிலான சமுதாய முதலீட்டு நிதிக்கான ஆணைகளும், 30 பயனாளிகளுக்கு ரூ.12,20,000/ மதிப்பிலான வங்கிக் கடன் இணைப்பிற்கான உதவித்தொகைக்கான ஆணைகளும், கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்பு (பொது விநியோகம்) துறையின் மூலம் 500 பயனாளிகளுக்கு புதிய குடும்ப அட்டைகளும், மாவட்ட தொழில் மையத்தின்மூலம் 11 பயனாளிகளுக்கு ரூ.30.66,000/ மதிப்பிலான பிசினஸ் சாம்பியன் உதவித்தொகைக்கான ஆணைகளும், வேளாண்மைத்துறையின் மூலம் 01 பயனாளிக்கு ரூ.67,220/ மதிப்பிலான Sub Mission on Agricultural Mechanization க்கான ஆணையும், 02 பயனாளிகளுக்கு Distribution of Puls esMinikitகளும், தோட்டக்கலைத்துறை மற்றும் மலைப்பயிர்கள் துறையின் மூலம் 01 பயனாளிக்கு ரூ.87,500/ மதிப்பிலான தேசிய தோட்டக்கலை இயக்கம் குறைந்த செலவிலான வெங்காய சேமிப்புக்கிடங்கு உதவித்தொகைக்கான ஆணையும், 01 பயனாளிக்கு ரூ.75,000/ மதிப்பிலான தேசிய வேளாண்மை வளர்ச்சித் திட்டம் நிரந்தர கல் பந்தல் உதவித்தொகைக்கான ஆணையும், வேளாண் மற்றும் பொறியியல் துறையின் மூலம் 02 பயனாளிகளுக்கு ரூ.10.20,000/ மதிப்பிலான Sub Mission on Agricultural Mechanizationக்கான உதவித்தொகைக்கான ஆணைகளும், 02 பயனாளிகளுக்கு 16,00,000/ மதிப்பிலான Creation of Water source for (SC/ST) Small /Marginal farmers under KAVIADP உதவித்தொகைகளுக்கான ஆணைகளும் என மொத்தம் 1002 பயனாளிகளுக்கு ரூ.4.46 கோடி மதிப்பிலான நலத்திட்ட உதவிகள் வழங்கப்பட்டுள்ளது என மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் தெரிவித்தார். திரு.ஏ.கே.கமல்கிஷோர். இ.ஆ.ப.முன்னதாக, தென்காசி நாடாளுமன்ற உறுப்பினர் அவர்கள். தென்காசி சட்டமன்ற உறுப்பினர் அவர்கள், சங்கரன்கோவில் சட்டமன்ற உறுப்பினர் அவர்கள், வாசுதேவ நல்லூர் சட்டமன்ற உறுப்பினர் அவர்கள் ஆகியோர் முன்னிலையில்மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள்தலைமையில் சமத்துவநாள் உறுதிமொழியினை அனைத்து துறை அரசுஅலுவலர்களும் ஏற்றுக்கொண்டனர். இந்நிகழ்ச்சியில், மாவட்ட வருவாய் அலுவலர் திரு.சீ.ஜெயச்சந்திரன், மாவட்ட ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் திருமதி. கி.அன்னம்மாள், நல அலுவலர் மாவட்ட ஊராட்சிக்குழு துணைத் தலைவர் திரு.உதயகிருஷ்ணன் மற்றும் அனைத்து துறை அரசு அலுவலர்கள். உள்ளாட்சி பிரதிநிதிகள் ஆகியோர் கலந்துகொண்டனர்.

## கன்னியாகுமரியில் கடலில் மூழ்கி கல்லூரி மாணவன் பலி

கன்னியாகுமரி, ஏப்.15

அஞ்சுகிராமம் அருகே ரஸ்தாகாட்டில் கடலில் குளித்த கல்லூரி மாணவர் சிபி(17) உயிரிழந்தார். தனது நண்பர்களுடன் கடலில் குளித்தபோது சிபி நீரில் மூழ்கி பலியானார். மேலும் 2 பேர் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

## அண்ணல் அம்பேத்கர் 135 வது பிறந்தநாள் விழா திமுக, காங்கிரஸ், மதிமுக, விசிக, இயக்கங்கள் மரியாதை செலுத்தினர்



தமிழ்நாடு கூட்டுறவுத்துறை அமைச்சர்தனது திருப்புத்தூர்சட்டமன்ற அலுவலகத்தில் உள்ள அண்ணல் அம்பேத்கர் அவர்களின் உருவப்படத்திற்கு மாலை அணிவித்து மலர்தூவி மரியாதை செலுத்தினார்.

மாண்புமிகு அமைச்சர் கேஆர். உள்ளிட்ட கழக நிர்வாகிகள் ஏராளமானோர் சமத்துவநாள் உறுதிமொழி எடுத்துக்கொண்டனர்.

இந்த நிகழ்ச்சியில் திருப்புத்தூர் பேரூர்க்கழக செயலாளர் கார்த்திகேயன், மாவட்ட ஐடி விங் காளிமுத்து, தேவாரம்பூர் மேனாள் ஊராட்சி தலைவர் இராமநாதன் ,முகமது கனி, சுலைமான் பாதுஷா, வைரமணி, கணேசன், பூக்கடை பாண்டியன் உள்ளிட்ட நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

இதேபோல் சிவகங்கையில் நகர்மன்றத் தலைவர் சி எம். துரை ஆனந்த் தலைமையில் அம்பேத்கர் சிலைக்கு மாலை அணிவித்தனர்..

இந்த நிகழ்ச்சியில் கொபசெ துணைச் செயலாளர் முனைவர் தமிழ்ப்ரியா வேங்கை பிரபாகரன், நகர் மன்றத் துணைத்தலைவர் வழக்கறிஞர்கார்கண்ணன், கவுன்சிலர்கள் மாவட்ட திட்டக்குழு உறுப்பினர் நகர்க்கழக துணைச்செயலாளர் வீணஸ் இராமநாதன், ஜெயகாந்தன், வீரகாளை, ஆறு. சரவணன், இராமதாஸ், நகர் மகளிர் தொண்டரணி அமைப்பாளர் இராஜேஷ்வரி அண்ணாத்துரை, சுப. ஜெயக்குமார், உள்ளிட்ட நிர்வாகிகள், நகர் மன்ற உறுப்பினர்கள் ஏராளமானோர் சமத்துவநாள் உறுதிமொழி எடுத்துக் கொண்டனர்...

காங்கிரஸ் பேரியக்கத்தின் சார்பில் மாநில பொதுச்செயலாளர் வள்ளல் பச்சேரி சி. ஆர். சுந்தரராஜன் தலைமையில் அண்ணல் அம்பேத்கர் சிலைக்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தப்பட்டது..

இந்த நிகழ்ச்சியில் சட்டமன்ற தொகுதி பொறுப்பாளர் சோணை, வட்டார Insurance மதியழகன், உடையார், செல்லப் பாண்டியன்,நகர் தலைவர் விஜயகுமார் , மகேஸ்குமார் , சிதம்பரம், சண்முகராஜன், மாவட்ட சிறுபான்மை பிரிவு தலைவர் மஹாராணி சையது இப்ராஹீம்,மாவட்ட பிரிவு தலைவர் டாக்டர் ராஜேந்திரன்,மாநில எஸ். சி. எஸ்டி பிரிவு செயலாளர் மேலமங்கலம் முரளிதரன், செங்குட்டுவன் ஆலோசனைகுழு உறுப்பினர்) ஆரோக்கிய சாந்தாராணி, வீரகாளை, லெட்சுமணன், பூக்கடை பாண்டியன், சீனிவாசன், காளிமுத்து, ஆர்ட்டிஸ்ட் ஜெகன் கருப்பையா, விக்னேஸ்வரன், தென்னரசு, முத்துவடிவேல், சிவநேசன், உள்ளிட்ட காங்கிரஸ் பேரியக்க நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

இதேபோல் காரைக்குடியில் மதிமுக சார்பில் மாவட்டக்கழக செயலாளர் பசும்பொன் மனோகரன் தலைமையில் அண்ணல் அம்பேத்கர் சிலைக்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தினர். இந்த நிகழ்ச்சியில் நகர்க்கழக செயலாளர் எழுச்சி முத்து, கழக சட்டதிட்டக் குழு சேதுதியாகராஜன், வழக்கறிஞர் முருகானந்தம், மாணவரணி ஃபாருக் கான், பொறியாளரணி சம்சுதீன் , வேங்கை மூர்த்தி, மாநில பொறியாளரணி பிரபாகரன் உள்ளிட்ட மதிமுக நிர்வாகிகள் ஏராளமானோர் மாலை அணிவித்து மரியாதை செலுத்தினர்.

விடுதலைச்சிறுத்தைகள் சார்பில் சிவகங்கை தெற்கு மாவட்ட செயலாளர் வழக்கறிஞர் பாலையா தலைமையில் அண்ணல் அம்பேத்கர் சிலைக்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தினர்.

இந்த நிகழ்ச்சியில் மண்டல துணைச் செயலாளர் முத்துராசு, மாவட்ட பொருளாளர்பாஸ்கரன், மாவட்ட செய்தித்தொடர்பாளர் மூ.ஆதிவளவன் , மாவட்ட துணைச்செயலாளர், காடனேரி சுடர்மணி , மாநில அமைப்புச் செயலாளர் மோ. எல்லாளன், உள்ளிட்ட விசிக நிர்வாகிகள் ஏராளமானோர் கலந்துகொண்டனர்.. இதேபோல வழக்கறிஞர்கள் சார்பில் சிவகங்கையில் உள்ள அம்பேத்கர் சிலைக்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தினர்.

இதில் வழக்கறிஞர் சக்கந்தி முருகன் , மாநில காங்கிரஸ் எஸ்சி. எஸ்டி பிரிவு மாநில செயலாளர் மேலமங்கலம் முரளீதரன், வழக்கறிஞர் தினேஷ்குமார், மலைச்சாமி, சூரக்குளம் சுரேஷ், ஜெயக்குமார், கிருஷ்ணன், ஜெயபால், பாரதிராஜா, ஸ்ரீ தர் உள்ளிட்ட வழக்கறிஞர்கள் மாலை அணிவித்து மரியாதை செலுத்தினர்..

இதேபோல் சிவகங்கை மாவட்டம் முழுவதும் உள்ள பல்வேறு அரசியல் கட்சி, தலித் இயக்கங்கள், பல்வேறு இயக்கங்கள் சார்பில் மாலை அணிவித்து மரியாதை செலுத்த ப்பட்டது...

## சட்ட மாமேதை அம்பேத்கரின் 135 வது பிறந்தநாள் அரசு விழா: நாயகனின் படம் வெளியில் வைத்து மரியாதை -பொதுமக்கள் அதிர்ச்சி



சட்ட மாமேதை அம்பேத்கரின்135வது ஆண்டு பிறந்தநாள் விழா நாடு முழுவதும் கோலாகலமாக கொண்டாடப்பட்டு வருகிறது

அதிலும் தமிழகத்தில் மிகவும் முக்கியத்துவம் வழங்கப்பட்டு சமத்துவ நாள் விழாவாக மாநிலம் முழுவதும் அரசு சார்பில் மிகச் சிறப்பாக நடத்த வேண்டும் என தமிழக முதல்வர் மு க ஸ்டாலின் உத்தரவு பிறப்பித்துள்ளார்

இதையொட்டி மாவட்டம் தோறும் மாவட்ட ஆட்சியர்கள், சட்டமன்ற உறுப்பினர்கள் தலைமையில் மாமேதை அம்பேத்கர் அவர்களின் திருவுருவபடத்திற்கு மாலை மரியாதை செலுத்தி நல திட்டங்கள் வழங்கும் நிகழ்ச்சிகள் வெகு சிறப்பாக நடத்தப்பட்டு வருகிறது

தர்மபுரி மாவட்டத்தில் பெருமளவு பட்டியியல் இன மக்கள் வாழ்ந்து வருகின்றனர்

தர்மபுரி மாவட்டத்தின் சார்பில் தனித் தொகுதியான ஆரூரில் நகரப் பகுதியில் தனியாருக்கு சொந்தமான N.N.மஹால் என்ற திருமண மண்டபத்தில் அரசு விழா நடைபெற்றது

இதில் தர்மபுரி மாவட்ட ஆட்சியர் சதீஷ், மாவட்ட வருவாய்அலுவலர்கவிதா , நாடாளுமன்ற உறுப்பினர் மணி, அரூர் சட்டமன்ற உறுப்பினர் சம்பத், திமுக மேற்கு மாவட்ட செயலாளர் முன்னாள் அமைச்சர் பி. பழனியப்பன் மற்றும் ஏராளமான அரசுத்துறை உயர் அதிகாரிகள் வட்டாட்சியர்கள், பயனாளிகள்ஆயிரத்துக்கு மேற்பட்டவர்கள் என மிக பிரம்மாண்டமாக விழா நடைபெற்றது

இந்தவிழாவையொட்டி நலதட்டங்கள் வழங்க நிகழ்ச்சி ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது அந்த நிகழ்ச்சியில் விழாவின் நாயகனான அம்பேத்கரின் புகைப்படம் திருமண மண்டபத்தில் வாசற்படி அருகே வைக்கப்பட்டு பூக்கள் தூவி மாவட்ட ஆட்சியர் சதீஷ், நாடாளுமன்ற உறுப்பினர் மணி, சட்டமன்ற உறுப்பினர் சம்பத், அரசு அதிகாரிகள் மரியாதை செலுத்தி நல திட்டங்கள் வழங்கும் நிகழ்ச்சியை மண்டபத்திற்கு உள்ளே அழைத்து நடத்தினர் இதை கண்ட பொதுமக்கள் அதிர்ச்சியடைந்தனர். விழா யாருக்காக நடத்தப்படுகிறது பிறந்தநாள் யாருக்காக கொண்டாடப்படுகிறதே அவரது புகைப்படத்தை வாசப்படி அருகே வைத்து விட்டு அவருக்கான விழாவை நடத்தியதுபொதுமக்களிடையே அதிர்ச்சியை ஏற்படுத்தியது தமிழக முதல்வர் தலைமையில் சென்னையில் நடைபெற்ற நிகழ்ச்சியை அனைத்து தரப்பினரும்காணொளி காட்சி வழியாக பார்த்து ரசித்தனர்

அவர்கள் பார்த்து ரசித்த முதலமைச்சர் நிகழ்ச்சியில் துணை முதலமைச்சர், தலைமை செயலாளர் ,அம்பேத்கரின் பேரன், விடுதலை சிறுத்தைகளின் கட்சி தலைவர் திருமாவளவன், காங்கிரஸ் கட்சி தலைவர் செல்வபெருந்தகை மற்றும் ஏராளமான தமிழக அமைச்சர்கள்,சட்டமன்ற உறுப்பினர்,மற்றும் உயர் அதிகாரிகள் மத்தியில் நடைபெற்ற விழாவில் விழாவின் நாயகன் சட்ட மாமேதை அம்பேத்கரின் புகைப்படம் விழா மேடையில் அலங்கரித்து வைக்கப்பட்டு மரியாதை செலுத்தப்பட்டு மிக கம்பீரமாக விழா நடைபெற்று வந்த வேலையில் தருமபுரிமாவட்டநிர்வாகத்தின் சார்பில் நடைபெற்ற அம்பேத்கர் பிறந்தநாள் நிகழ்ச்சியில் விழாநாயகன் அம்பேத்கர் படம் விழா மண்டபத்திற்கு வெளியே வைக்கப்பட்டு மரியாதை செலுத்தப்பட்டிருந்தது இச்சம்பவம் பொது மக்களிடையே, ஒடுக்கப்பட்ட மக்களிடையே அதிர்ச்சியில் ஏற்படுத்தி உள்ளது தர்மபுரியில் சமத்துவ நாள் நிகழ்ச்சி பெயரளவிற்கு மட்டுமே நடைபெறுகிறது என்பது வெட்ட வெளிச்சமாக தெரிகிறது

ஒரு தேசத் தந்தையின் பிறந்தநாள் விழாவை தமிழக அரசு மிக முக்கியத்துவம் கொடுத்து சமத்துவ நாள் விழாவாக நடத்திவரும் வேளையில் தர்மபுரி மாவட்ட நிர்வாகம் தேச தந்தை அம்பேத்கார் புகைப்படத்தைவிழா மேடையில் வைத்து மரியாதை செலுத்தாமல் மண்டபத்திற்கு வெளியில் வெளியில் வைத்து விழா நடத்தியது அனைவரையும் அதிர்ச்சி அடைய வைத்துள்ளது

## பெரணமல்லூர் மேற்கு ஒன்றிய திமுக செயலாளர் எம்.டி.மனோகரன் தலைமையில் அம்பேத்கர் பிறந்த நாள் விழா சமத்துவ நாள் உறுதிமொழி



திருவண்ணாமலை மாவட்டம் பெரணமல்லூர் மேற்கு ஒன்றிய திமுக சார்பில் சட்ட மேதை அம்பேத்கார் பிறந்தநாள் முன்னிட்டு சமத்துவ நாள் உறுதிமொழி எடுத்துக் கொண்டனர்.

தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின் அம்பேத்கார் பிறந்த நாள் முன்னிட்டு சமத்துவ நாள் உறுதிமொழி எடுத்து கொள்ள வலியுறுத்தி இருந்தார். அதன்படி, தமிழகமெங்கும் நேற்று அம்பேத்கார் பிறந்த நாள்சமத்துவ உறுதிமொழி எடுத்துக் கொண்டனர் இந்நிலையில் பெரணமல்லூர் மேற்கு ஒன்றிய திமுக சார்பில் வாழைப்பந்தல் கூட்ரோடு பகுதியில் நடைபெற்ற நிகழ்ச்சிக்கு ஒன்றிய செயலாளர் எம். டி.மனோகரன் தலைமை தாங்கினார். ஒன்றிய துணைச் செயலாளர் குணசேகரன், மாவட்ட இளைஞரணி அமைப்பு துணை அமைப்பாளர் கலாம் பாஷா, தியாகராஜன், மாவட்ட பிரதிநிதி விஜயகுமார், பொருளாளர் சசிகுமார் முன்னிலை வகித்தனர். இளைஞர் அணி துணை அமைப்பாளர் அருண் வரவேற்றார். தொடர்ந்து நடைபெற்றநிகழ்ச்சியில் அம்பேத்கார் உருவப்படத்திற்கு மாலை அணிவித்து பூத்தூவி மரியாதை செலுத்தினர். பின்னர் ஒன்றிய செயலாளர் எம். டி.மனோகரன் தலைமையில்.சமத்துவ நாள் உறுதிமொழி எடுத்து கொண்டனர். அனைவருக்கும் இனிப்பு வழங்கப்பட்டது. இதில் தொண்டரணி நடராஜன், கிளைச் செயலாளர் முருகன், இளைஞர் அணி அன்பரசன் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

# அதிமுகபாஜ கூட்டணி செங்கோட்டையன் பெரிய கும்பிடு



கோபி, ஏப்.15

அதிமுகபாஜ கூட்டணிக்கு எடப்பாடி பல்வேறு நிபந்தனைகள் வைத்ததால், அவருக்கு எதிராக போர்க்கொடி தூக்கிய அதிமுக முன்னாள் அமைச்சர் செங்கோட்டையனைவைத்து அதிமுகவில் குழப்பத்தை ஏற்படுத்த பாஜ முயற்சித்தது. செங்கோட்டையன் தலைமையில் ஒரு அணியை உருவாக்கி கூட்டணி அமைக்க திட்டமிட்டது. இதற்காக செங்கோட்டையனை டெல்லி அழைத்து பேசிய நிலையில், திடீரென அதிமுக பாஜ கூட்டணிக்கு எடப்பாடி சம்மதம் தெரிவித்து அதிகாரப்பூர்வமாக அறிவிக்கப்பட்டது.

இந்நிலையில், கோபி அருகே கொடிவேரியில் நேற்று ஒரு தனியார் நிகழ்ச்சியில் கலந்து கொண்ட செங்கோட்டையனிடம் அதிமுக பாஜ கூட்டணி குறித்து கேட்டபோது, 'பொதுச்செயலாளர்...' என்ற ஒற்றை வார்த்தையை மட்டும் கூறினார். தொடர்ந்து, கேட்கப்பட்ட மற்ற கேள்விகளுக்கு பதில் அளிக்க மறுத்த அவர், கையெடுத்து கும்பிட்டவாறு அங்கிருந்து வெளியேறினார்.

# திருச்சி மாவட்டத்தில் கொள்ளையனை மடக்கி பிடித்த இளம்பெண்



சென்னை, ஏப்.15

திருச்சி மாவட்டத்தை சேர்ந்தவர் யோகராணி (26). இவர், சைதாப்பேட்டையில் உள்ள சகோதரி வீட்டில் தங்கி, வள்ளுவர் கோட்டத்தில் உள்ள தனியார் நிறுவனத்தில் வேலை செய்து வருகிறார். இந்நிலையில், கடந்த 10ம் தேதி தி.நகர் பேருந்து நிலையத்தில் காத்திருந்தார். அப்போது அங்கு வந்த மர்மநபர் ஒருவர், திடீரென யோகராணி அணிந்திருந்த ஒன்றரை சவரன் செயினை பறிக்க முயன்றுள்ளார்.

சுதாரித்துக் கொண்ட யோகராணி, கழுத்தில் கிடந்த செயினை ஒரு கையால் பிடித்துக் கொண்டார். அடுத்து துணிச்சலாக மற்றொரு கையால் அந்த மர்ம நபரைப் பிடித்து, அக்கம் பக்கத்தினர் உதவியுடன் மாம்பலம் காவல் நிலையத்தில் ஒப்படைத்தனர். விசாரணையில், சைதாப்பேட்டையை சேர்ந்த ராஜா (40) என்பது தெரிய வந்தது. அவரை கைது செய்தனர். யோகராணியின் இந்தச் செயலைக் கண்ட பொதுமக்களும் போலீசார் பாராட்டினர்.

# மிக்சியில் அரைத்தபோது மின்சாரம் தாக்கி இளம்பெண் பலி



திருவாரூர், ஏப்.15

திருவாரூர்தாலுகாபின்னவாசல் கிராமத்தை சேர்ந்தவர் அழகு திருநாவுக்கரசு (35). விவசாயி. இவரது மனைவி சிந்து பைரவி (28). இரண்டரை வயதில் ஆண் குழந்தையும், 7 மாத பெண் குழந்தையும் உள்ளது. இந்நிலையில் வீட்டில் இருந்து வரும் டேபிள் பேன் ஒன்றுக்கு ஒயர் பற்றாக்குறை காரணமாக மற்றொரு ஒயரினை இணைத்து பயன்படுத்தியுள்ளனர்.

ஒயர்கள் இணைக்கப்பட்ட இடத்தில் டேப்ரோல் சுற்றாமல் சாதாரணமாக ஒயர் இணைக்கப்பட்டு வீட்டின் தரையில் இருந்துள்ளது. நேற்று 7 மாத பெண் குழந்தைக்கு உணவு ஊட்டுவதற்காக வீட்டில் மிக்சியில் சாதத்தைஅரைத்து எடுத்து சென்ற போது,

\ சிந்து பைரவி தவறுதலாக ஒயர் இணைப்பில் காலை வைத்து விட்டார். இதில் மின்சாரம் தாக்கி சிந்து பைரவி உயிரிழந்தார்.

# தஞ்சாவூர் ரயில் நிலைய முகப்பில் பெரிய கோயிலுக்கு பதிலாக வடநாட்டு மந்திர் கோயில்: ஒன்றிய அரசுக்கு கண்டனம்



தஞ்சாவூர், ஏப்.15


நாட்டில் உள்ள பல்வேறு ரயில் நிலையங்களை நவீன வசதிகளுடன் ஒன்றிய அரசு புதுப்பித்து வருகிறது. அவ்வாறு புதுப்பிக்கும்போது அந்த ஊரில் சிறப்பை ரயில் நிலைய முகப்பில் அமைத்து வருகின்றனர். அதன்படி தஞ்சாவூர் ரயில் நிலையம் புதுப்பிக்கப்பட்டு வருகிறது. இந்த ரயில் நிலைய நுழைவாயில் முகப்பில் இருந்த உலகப் புகழ் பெற்ற தஞ்சாவூர் பெரிய கோயில் இருந்த இடத்தில் தற்போது வடநாட்டு மந்திர் கோயில் இடம் பெற்றுள்ளது சர்ச்சையை ஏற்படுத்தி உள்ளது. இதற்கு ஒன்றிய அரசுக்கு உலகத் தமிழர் பேரமைப்பு கண்டனம் தெரிவித்துள்ளது.

இதுகுறித்து உலகத் தமிழர் பேரமைப்பின் துணைத் தலைவர் அய்யனாபுரம் முருகேசன் கூறியதாவது: ஒன்றிய அரசு தொடர்ந்துதமிழ்மொழி, பண்பாட்டு கலாச்சாரத்திற்கு எதிரான நடவடிக்கைகளை அனைத்து வழிகளிலும் திணித்து வருகிறது. தமிழ் மொழிக்கு எதிராக மனுதர்ம சனாதன கொள்கைகளை அமல்படுத்த முயற்சி செய்கிறது. திட்டமிட்டு பெரிய கோயில் இருந்த இடத்தில் வடநாட்டு மந்திர் கோவில் அமைத்திருப்பது தமிழர் பண்பாடு, கலாச்சாரத்தின் மீதான சனாதன பண்பாட்டு திணிப்பாகவே உள்ளது.

இது தமிழர்களின் மனங்களை வேதனைப் படுத்துவதாகவும் உள்ளது என்பதையும் சுட்டிக் காட்ட விரும்புகிறோம். பண்பாட்டுத் திணிப்புக்கு எதிரான வடநாட்டு மந்திர் அமைத்திருப்பதை தமிழ்நாட்டு மக்களின் சார்பில் கண்டனத்தை தெரிவித்துக் கொள்கிறோம். இதை கண்டித்து வரும் 16ம் தேதி அனைத்து ஜனநாயக அமைப்புகளையும் ஒன்று திரட்டி வலிமையான போராட்டம் நடைபெற உள்ளது. இந்த போராட்டத்தில் தமிழ் ஆர்வலர்கள், சமூக ஆர்வலர்கள், ஜனநாயக சக்திகள் பங்கேற்று சிறப்பிக்க உலகத்தமிழர் பேரவை சார்பில் அழைப்பு விடுக்கிறோம்.

இவ்வாறு அவர் கூறியுள்ளார்.

# பொய் புகார் என விசாரணையில் தெரிந்ததால் இணை கமிஷனர் மீதான சஸ்பெண்ட் உத்தரவு ரத்து: தமிழக அரசு நடவடிக்கை



சென்னை, ஏப்.15

பொய் புகார் கொடுக்கப்பட்டது விசாரணையில் தெரிந்த நிலையில், காவல்துறை இணை ஆணையர் மகேஷ்குமார் சஸ்பெண்ட் உத்தரவை தமிழக அரசு ரத்து செய்துள்ளது. சென்னை வடக்கு மண்டல போக்குவரத்து இணை ஆணையர் மகேஷ்குமார்மீது கடந்த பிப்ரவரி மாதம் போக்குவரத்து காவல் பிரிவில் பணிபுரியும் பெண் காவலர் ஒருவர் தமிழ்நாடு டிஜிபி அலுவலகத்தில் புகார் ஒன்றை அளித்திருந்தார்.

அந்த புகாரில் இணை ஆணையர் மகேஷ்குமார் பாலியல் ரீதியாக சில தினங்களாக தனக்கு தொந்தரவு கொடுப்பதாக தெரிவித்திருந்தார்.

இந்த புகாரை தொடர்ந்து விசாரணை எதுவும் மேற்கொள்ளப்படாமல் அன்றைய தினமே மகேஷ் குமாரை சஸ்பெண்ட் செய்து டிஜிபி சங்கர் ஜிவால் உத்தரவிட்டார். இதையடுத்து விசாகா கமிட்டி அமைக்கப்பட்டு தீவிர விசாரணை நடத்த உத்தரவிடப்பட்டது.

இந்நிலையில் புகார் அளித்த பெண்ணுக்கும் தனது கணவருக்கும் ஏற்கெனவே பழக்கம் இருப்பதாகவும், புகார்கொடுப்பதற்கு முந்தைய நாள் கூட இருவரும் ஓட்டலில் சந்தித்து பேசியதாகவும் இணை ஆணையர் மகேஷ்குமார் மனைவி தெரிவித்திருந்தார்.

மேலும் தனிப்பட்ட காரணங்களுக்கு அவர் மீது புகார் அளித்ததாகவும், தனது கணவரை மிரட்டும் நோக்கில் புகார் அளிக்கப்பட்டிருப்பதாகவும் தெரிவித்தார். இதைத்தொடர்ந்து விசாகா கமிட்டி மேற்கொண்ட விசாரணையில் பெண் காவல் உள்நோக்கத்துடன் புகார் அளித்திருப்பது தெரியவந்தது. இதையடுத்து பெண் காவலர் புகாரை வாபஸ் பெற்றுள்ளார்.

மேலும் விசாக கமிட்டி இந்த புகாரில் இதற்கு மேல் நடவடிக்கை எதுவும் தேவையில்லை என டிஜிபிக்கு அறிக்கை அளித்தது. இதையடுத்து டிஜிபி சங்கர் ஜிவால், இணை ஆணையர் மகேஷ் குமாரின் பணி இடைநீக்கத்தை திரும்ப பெறவும் அரசுக்கு பரிந்துரை செய்தார். இந்த நிலையில் இணை ஆணையர் மகேஷ்குமாரின் பணியிடை நீக்கத்தை ரத்து செய்து தமிழக அரசு உத்தரவிட்டுள்ளது.

# காதலித்துவிட்டு வேறு ஒருவருடன் நிச்சயதார்த்தம் நெருக்கமான படங்களை காட்டி காதலி திருமணத்தை நிறுத்திய காதலன்: ஒருநாள் இரவு இருந்துவிட்டு போ என மிரட்டியதால் போலீஸ் வலை

செய்யாறு, ஏப்.15

திருவண்ணாமலை மாவட்டம், செய்யாறு அருகே ஒரு கிராமத்தை சேர்ந்தவர் 22 வயது பட்டதாரி இளம்பெண். இவர்கடந்த ஓராண்டுக்கு முன்பு சென்னை ஒரகடத்தில் உள்ள தனியார் கம்பெனியில் வேலை செய்து வந்தார். அதே நிறுவனத்தில் வேலை பார்த்த காஞ்சிபுரம் மாவட்டம், உத்திரமேரூர் தாலுகா, இளநகர் கிராமத்தை சேர்ந்த ரவி மகன் பாலாஜி (23) என்பவர் இளம்பெண்ணிடம் பழகியுள்ளார். பின்னர் இருவரும் காதலித்து வந்துள்ளனர்.

இதற்கிடையில், பாலாஜி ஏற்கனவே திருமணமானவர் என சில மாதங்களுக்கு முன்பு இளம்பெண்ணுக்கு தெரியவந்தது. இதனால் அதிர்ச்சி அடைந்து பாலாஜியிடம் பழகுவதை அவர் தவிர்த்து வந்தார். இதற்கிடையில், பெற்றோர் விருப்பத்தின்படி கடந்த 6ம் தேதி செய்யாறு அடுத்த ஏனாதவாடி கிராமத்தில் உள்ள உறவினர் மகனுடன், இளம்பெண்ணுக்கு திருமண நிச்சயதார்த்தம் நடந்துள்ளது. இதையறிந்த பாலாஜி, கடந்த 7ம் தேதி மாப்பிள்ளையின் வீட்டிற்கு சென்று, இளம்பெண்ணுடன் எடுத்த நெருக்கமான புகைப்படங்களை காட்டி திருமணத்தை தடுத்து நிறுத்தி உள்ளார். பின்னர், இளம்பெண்ணுக்கு போன் செய்த பாலாஜி, `உனது திருமணத்தை நிறுத்திவிட்டேன். என்னிடம் தினமும் பேச வேண்டும், என்னிடம் ஒருநாள் இரவு இருந்துவிட்டு போ. இல்லாவிட்டால் புகைப்படங்களை இன்ஸ்டாகிராமிலும் சமூக வலைதளங்களிலும் பதிவேற்றம் செய்து அசிங்கப்படுத்தி விடுவேன்' எனக்கூறி டார்ச்சர் செய்துள்ளார். மேலும், அந்த பெண்ணின் ஊருக்கே சென்று, `என்னை மீறி நீ எப்படி திருமணம் செய்து கொள்கிறாய் என்று பார்க்கிறேன்' என மிரட்டியுள்ளார். இதனால் அதிர்ச்சியடைந்த இளம்பெண் செய்யாறு மகளிர் போலீசில் புகார் செய்தார். அதன்பேரில் போலீசார் வழக்குப் பதிந்து தலைமறைவான பாலாஜியை தேடி வருகின்றனர்.

# முத்தரசன் கண்டனம் ஆளுநரை மக்கள் எழுச்சி கட்டுப்படுத்தும்



சென்னை, ஏப்.15

இந்திய கம்யூனிஸ்ட் கட்சி மாநில செயலாளர் முத்தரசன் வெளியிட்ட அறிக்கை: திருப்பரங்குன்றம் தியாகராசர் கல்லூரியில் நடைபெற்ற கம்பன் விழாவில் பங்கேற்ற ஆர்.என்.ரவி, தமிழ்நாட்டின் பண்புக்கும், கலை, கலாச்சார மரபுக்கும் எதிராக "ஜெய் ஸ்ரீராம், ஜெய் ஸ்ரீராம்" என முழக்கம் எழுப்பியதுடன், அந்த நிகழ்வில் கலந்து கொண்ட மாணவர்களையும் ஜெய் ஸ்ரீராம் என முழக்கம் எழுப்புமாறு நிர்பந்தித்துள்ளார்.

நீதிமன்றத் தீர்ப்புகளுக்கும். சட்டத்துக்கும் மேலாகவும் தன்னை கருதிக் கொள்ளும் "அடங்கா பிடாரி" ஆர்.என்.ரவியை குடியரசுத் தலைவரும், ஒன்றிய அரசும் உடனடியாக திரும்பப் பெற வேண்டும். இதற்கு மாறாக ஆர்.என்.ரவியின் அடங்காப் பிடாரி செயல்கள் தொடருமானால், ஜனநாயக உணர்வு கொண்ட மக்கள் பேரெழுச்சி அவரை கட்டுப்படுத்தும். இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

# தடுப்பணையில் மூழ்கி சகோதரிகள் பலி





கோபால்பட்டி, ஏப்.15

திண்டுக்கல் மாவட்டம், சாணார்பட்டி அருகே எல்லைப்பட்டியை சேர்ந்தவர் தங்கராஜ். இவரது மகள்கள் பேபிஸ்ரீ (17), நாகசக்தி (12). இருவரும் அரசு பள்ளியில் படித்து வந்தனர். நேற்று விடுமுறை என்பதால் அஞ்சுகுழிப்பட்டி அருகே சங்கிலியான் தடுப்பணையில் குளிக்க தங்கராஜ், மகள்களை அழைத்துச் சென்றார்.

தடுப்பணையில் குளித்து கொண்டிருந்த பேபிஸ்ரீ, நாகசக்தி ஆகியோர் திடீரென ஆழமான பகுதிக்கு சென்று நீரில் மூழ்கி உயிரிழந்தனர். தகவலறிந்து சாணார்பட்டி போலீசார் வந்து 2 பேரின் உடல்களையும் கைப்பற்றி பிரேத பரிசோதனைக்காக திண்டுக்கல் அரசு மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தனர். இதுகுறித்து விசாரணை நடத்தி வருகின்றனர்.

# குவாண்டம் தின சிறப்பு நிகழ்ச்சிகளை நடத்த வேண்டும்: உயர்கல்வி நிறுவனங்களுக்கு ஏஜசிடிஇ அறிவுறுத்தல்




சென்னை, ஏப்.15

அனைத்து உயர் கல்வி நிறுவனங்களிலும் இன்று குவாண்டம் தினம்சிறப்புநிகழ்ச்சிகள் நடத்தப்பட வேண்டும் என ஏஐசிடிஇ அறிவுறுத்தியுள்ளது. இதுகுறித்து அகில இந்திய தொழில்நுட்பக் கல்விக் குழுமம் (ஏஐசிடிஇ) தலைவர்சீதாராம் அனைத்து விதமான உயர்கல்வி நிறுவனங்களுக்கும் அனுப்பியுள்ள சுற்றறிக்கை விவரம்: உலக அளவில் ஆண்டு தோறும்ஏப்ரல் 14ம் தேதி சர்வதேச குவாண்டம் தினம் அனுசரிக்கப்பட்டு வருகிறது.

நம்நாட்டில் குவாண்டம் தொழில்நுட்பத்தை மேம்படுத்தி, அதுகுறித்த ஆய்வுகளை ஊக்குவிக்கும் நோக்கத்தில் 'தேசிய குவாண்டம் மிஷன்' (என்க்யூஎம்) எனும் திட்டத்தை ஒன்றிய அறிவியல், தொழில்நுட்ப அமைச்சகம் நடைமுறைப்படுத்தியுள்ளது. இந்த திட்டத்தின் கீழ் குவாண்டம் தொழில்நுட்பத்தின் பயன்பாட்டை விரைவுபடுத்துவது, சுற்றுச்சூழல் அமைப்பை வளர்ப்பது, குவாண்டம் தொழில்நுட்பத்தில் இந்தியாவை முன்னணி நாடுகளில் ஒன்றாக மாற்றுவது போன்ற பல்வேறு செயல்பாடுகள் மேற்கொள்ளப்படவுள்ளன.

இந்நிலையில் குவாண்டம்தினத்தைமுன்னிட்டு அந்த தொழில்நுட்பத்தில் உள்ள வாய்ப்புகள் குறித்த ஆர்வத்தை ஊக்குவிக்கவும், விழிப்புணர்வு ஏற்படுத்தும் வகையிலும் இன்று (ஏப்ரல் 14) சிறப்பு நிகழ்ச்சிகள் நடத்தப்பட வேண்டும். அதாவது, நிபுணர்கள் சிறப்புரை, குழு விவாதங்கள், பயிற்சிப் பட்டறைகள் உட்பட நிகழ்ச்சிகளுக்கு ஏற்பாடு செய்ய வேண்டும். அவ்வாறுநடத்தப்பட்ட உலக குவாண்டம் தின செயல்பாடுகள் குறித்து விவரங்களை ஏஜசிடிஇ தளத்தில் ஏப்ரல் 21ம் தேதிக்குள் பதிவேற்றம் செய்ய வேண்டும். இவ்வாறு சுற்றறிக்கையில் கூறப்பட்டுள்ளது. இவ்வாறு அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# கார், பஸ் மோதல் 4 பேர் பரிதாப பலி







கீழ்பென்னாத்தூர், ஏப்.15

புதுச்சேரியை சேர்ந்தவர் ஸ்டாலின். இவரது நண்பர்கள் அதே பகுதியை சேர்ந்த சதீஷ்குமார்(43), சைலேஷ்குமார், சரோப் ஞானசேகரன்(47). இவர்கள் 4 பேரும் லாரி உரிமையாளர்கள். கர்நாடக மாநிலம், பெங்களூருவில் லாரி வாங்க ஸ்டாலின் உள்பட 4 பேரும் நேற்று முன்தினம் காரில் சென்றனர். அங்கு வேலையை முடித்துக்கொண்டு நள்ளிரவுதிருவண்ணாமலை வழியாக புதுச்சேரிக்கு வந்து கொண்டிருந்தனர்.

திருவண்ணாமலை மாவட்டம், கீழ்பென்னாத்தூர் அடுத்த காட்டுக்குளம் அருகே அதிகாலை 3.30 மணியளவில் வந்த போது, எதிரே சென்னை அடையாறில் இருந்து திருவண்ணாமலை சென்ற அரசு பஸ்சும், காரும் நேருக்கு நேர் மோதிக்கொண்டன. இதில் காரின் முன் பக்கம் அப்பளம்போல் நொறுங்கியது. காரில் பயணம்செய்தஸ்டாலின் உள்பட 4 பேரும் பலத்த காயமடைந்து சம்பவ இடத்திலேயே பரிதாபமாக இறந்தனர்.

# தவெகவினர் பட்டாசு வெடித்தில் பந்தல் தீப்பற்றி எரிந்தது



ஈரோடு, ஏப்.15

ஈரோடு மூலப்பாளையம் அண்ணமார் பெட்ரோல் பங்க் எதிரே நேற்று தமிழக வெற்றிக் கழகம் சார்பில் நீர் மோர் பந்தல் திறக்கப்பட்டது. இதையொட்டி அக்கட்சி தொண்டர்கள் பட்டாசு வெடித்தனர். அப்போது தீப்பொறி தெறித்து அருகில் இருந்த சுமை தூக்கும் தொழிலாளர்கள் சங்க பந்தல் மீது விழுந்து தீப்பிடித்து எரிந்தது.

பந்தல் மட்டுமின்றி அங்குள்ள சுடுகாட்டில் இருந்த காய்ந்த புற்களும் தீப்பிடித்து எரிந்தது. தகவலறிந்து தீயணைப்பு துறையினர் வந்து தீயை அணைத்தனர். இதுகுறித்து ஈரோடு தாலுகா போலீசார் வந்து விசாரித்தனர். அப்போது தவெகவினர், சுமை தூக்கும் தொழிலாளர்கள் சங்க நிர்வாகிகள் இடையே வாக்குவாதம் ஏற்பட்டது. பின்னர் இரு தரப்பினரும் சமாதானம் அடைந்து கலைந்து சென்றனர்.

# தமிழ் வருடப் பிறப்பு கோயம்பேடு மார்க்கெட்டில் பூக்களின் விலை இரு மடங்கு அதிகரிப்பு

சென்னை, ஏப்.15

தமிழ் வருடப் பிறப்பை முன்னிட்டு கோயம்பேடு பூ மார்க்கெட்டில்பூக்களின்விலைஇருமடங்குஅதிகரித்து விற்பனை செய்யப்பட்டது. தமிழ் வருட பிறப்பை முன்னிட்டு பூ மார்க்கெட்டில் கனகாம்பரம், சாமந்தி, சம்பங்கி, அரளி பூ, சாக்லேட் ரோஸ் பன்னீர் ரோஸ் ஆகியபூக்களின்விலைஇரண்டுமடங்குஉயர்ந்துள்ளது. இதன்படி, ஒரு கிலோ மல்லி ரூ. 500க்கும், ஐஸ் மல்லி ரூ. 300 இருந்து ரூ. 400க்கும், ஜாதிமல்லி மற்றும் முல்லை ரூ.300 இருந்து ரூ. 400க்கும், கனகாம்பரம் ரூ.500 இருந்து ரூ. 800க்கும், சாமந்தி ரூ. 180 இருந்து ரூ. 240க்கும், சம்பங்கி ரூ. 150 இருந்து ரூ. 200க்கும், அரளி பூ ரூ.300 இருந்து ரூ.500க்கும், சாக்லேட் ரோஸ் ரூ. 120 இருந்து ரூ. 180க்கும், பன்னீர் ரோஸ் ரூ. 100 இருந்து ரூ. 140க்கும் விற்பனை செய்யப்பட்டு வருகிறது. இதுகுறித்து கோயம்பேடு பூ மார்க்கெட் துணைத் தலைவர் முத்து ராஜ் கூறுகையில், ''தமிழ் வருடப் பிறப்பு புத்தாண்டு முன்னிட்டு பூக்களின் விலை இரண்டு மடங்கு அதிகரித்துள்ளது. வரத்து குறைவால் கனகாம்பரம் சாமந்தி, சம்பங்கி, அரளி பூ, சாக்லேட் ரோஸ், பன்னீர் ரோஸ் பூக்களின் விலையும் உயர்ந்துள்ளது. வெயிலின் தாக்கம் அதிகரிப்பு காரணமாக மல்லி, ஐஸ் மல்லி, ஜாதிமல்லி, முல்லை பூக்களின் விலை சற்று குறைந்துள்ளது என்றார்.

# அதிமுக கூட்டணியில் தமாகாவுக்கு 10 சீட்? வாசன் முன்னிலையில் மாஜி எம்.பி சூசகம்

நத்தம், ஏப்.15

திண்டுக்கல் மாவட்டம், நத்தம் அருகே கவரயபட்டியில் கட்சி நிர்வாகி இல்ல விழாவில் தமாகா தலைவர் ஜி.கே.வாசன் நேற்று கலந்து கொண்டார். பின்னர் அவர் செய்தியாளர்களிடம் கூறுகையில், ''மக்கள் எதிர்பார்த்தது தான் அதிமுக – பாஜ கூட்டணி. எங்கள் கூட்டணி வெற்றி பெறும். சட்டமன்ற தேர்தலுக்கு எங்களை தயார்படுத்தி கொண்டிருக்கிறோம்.

ஒத்த கருத்தோடு எங்கள் கூட்டணி தேர்தலை சந்திக்கும்'' என்றார். இதை தொடர்ந்து செய்தியாளர்கள், வாசனிடம், 'எத்தனை சீட் கூட்டணியில் கேட்க உள்ளீர்கள்' என கேள்வி எழுப்பினர். அப்போது அவரது அருகிலிருந்த முன்னாள் எம்பி சித்தன், 10 விரல்களை காண்பித்தார். உடனே சுதாரித்துக் கொண்ட வாசன், சித்தனிடம், நீங்கள் 10 என்று கை காட்டியதை 100 என்று போட்டு விடுவார்கள் என கூற, அங்கிருந்தவர்களிடம் சிரிப்பலை எழுந்தது.

தினகனி

Namadhu dhina kani daily morning newspaper
Press register general of India
PRGI NO TNTAM/2023/88253

15.4.2025

# தென்காசி மாவட்டம் விருட்சம் கல்வி மற்றும் தொண்டு அறக்கட்டளை அட்வகேட் மிரர் மாத இதழ் மற்றும் மக்கள் உரிமைகள் பாதுகாப்பு இயக்கம் இணைந்து நடத்திய பல்துறை சாதனையாளர்கள் விருது




தென்காசி மாவட்டம் விருட்சம் கல்வி மற்றும் தொண்டு அறக்கட்டளை அட்வகேட் மிரர் மாத இதழ் மற்றும் மக்கள் உரிமைகள் பாதுகாப்பு இயக்கம் இணைந்து நடத்திய பல்துறை சாதனையாளர்கள் விருது 2025 வழங்கும் விழா சாம்பவர் வடகரை முருகம்மாள் மகாலில்வைத்துஇனிதே சிறப்பாக நடைபெற்றது நிகழ்ச்சியில் சேரன்மகாதேவி சரகம் வனச்சரகர் திருபாலசுப்பிரமணியன் மற்றும் விருட்சம் அறக்கட்டளை நிறுவனர் வேல்சாமி ஆகியோர் தலைமை தாங்கினார்கள். வழக்கறிஞர் சுடலைமணி முன்னிலை வகித்து வரவேற்புரை ஆற்றினார். நிகழ்ச்சியில் சிறப்பு விருந்தினர்களாக சாம்பவர் வடகரை காவல் உதவி ஆய்வாளர் திரு. முத்துப்பாண்டி , தனிப்பிரிவு காவலர் திரு. ஸ்ரீதர் முதல் நிலை காவலர் திரு பாலா மக்கள் உரிமைகள் பாதுகாப்பு இயக்கம் மாநில இணை பொது செயலாளர் நெய்னாமுகமது ஆகியோர் கலந்து கொண்டு பல் துறை சாதனையாளர் விருது விழாவிற்கு வருகை புரிந்த சாதனையாளர்கள் அனைவருக்கும் தங்களது பொற்கரங்களால் விருது மற்றும் பாராட்டு சான்றிதழ் வழங்கினார்கள். மேலும் நிகழ்ச்சியில் தமிழ்நாடு முழுவதும் உள்ள சமூக ஆர்வலர்கள் கலந்து கொண்டு சிறப்பித்தா ர்கள். விழாவில் வழக்கறிஞரும் விருட்சம் அறக்கட்டளை நிர்வாக அறங்காவலருமான பார்த்திபன். ரியல் எஸ்டேட் சங்கர் பத்திரிகையாளர் வெங்கடேஷ் தொழிலதிபர் மாரிச்செல்வம் மதுரை சரவணன் சாம்பவர் வடகரை பேரூராட்சி மன்ற உறுப்பினர்கள் ஐயப்பன் பழனிக்குமார் என்ற முருகன் சமூக ஆர்வலர் கந்தசாமி தலப்பாக்கட்டு பிரியாணி உரிமையாளர் ஹரிஹர செல்வம் தமிழ்நாடு பிரஸ் கிளப் நெல்லை மண்டல செயலாளர் வசந்தன் நிருபர் சந்திரன் கனிராஜ் தமிழ்நாடு தொண்டு நிறுவனங்களின் கூட்டமைப்பின் தலைவர் சிவகாசி ரஜினி முருகன் ஆகியோர் கலந்து கொண்டனர்.

# டூவீலர் மீது வேன் மோதல்: 3 பேர் சாவு

திருச்சி, ஏப்.15
கள்ளக்குறிச்சி மாவட்டம்திருக்கோவிலூர்அருகேயுள்ள மேமாலூர் கோயில் தெருவை சேர்ந்தவர் அலெக்ஸ் விஜய் (25). கரும்பு வெட்டும் தொழிலாளி. இவரது மனைவி அருள்மேரி (22). இவர்களுக்கு அந்தோணி ஜோஸ்வா என்ற 7 மாத கைக்குழந்தை உள்ளது. சிவகங்கை மாவட்டம் தேவகோட்டையில் கரும்பு வெட்டும் பணிக்காக, மனைவி, மகனுடன் டூவிலரில் வீட்டிலிருந்து புறப்பட்டார். திருச்சிசென்னை தேசிய நெடுஞ்சாலையில் திருச்சி ஸ்ரீரங்கம் அருகே நேற்று காலை வந்து கொண்டிருந்தனர். அப்போது, பின்னால் வந்த வேன் இவர்களது டூவீலர் மீது பயங்கரமாக மோதியது. அப்போது, வேனின் சக்கரங்கள் ஏறியதில் அருள்மேரியும், குழந்தையும் சம்பவ இடத்திலேயே உயிரிழந்தனர். பலத்த காயமடைந்த அலெக்ஸ் விஜயை அருகில் இருந்தோர் மீட்டு திருச்சி அரசு மருத்துவமனையில் சேர்த்தனர். அங்கு அவர் சிகிச்சை பலனின்றி உயிரிழந்தார். திருச்சி வடக்கு போக்குவரத்து போலீசார் வேனை பிடித்தனர். விசாரணையில்விபத்தை ஏற்படுத்தியது திருச்சி மாவட்டம் மண்ணச்சநல்லூரை சேர்ந்த கதிரேசன் (43) என்பது தெரிந்தது. இதுகுறித்து வழக்கு பதிந்து விசாரித்து வருகின்றனர்.

# ஒன்றிய சிறுபான்மை நலத்துறை அலட்சியத்தால் 52,000 இந்தியர்களின் ஹஜ் யாத்திரை கேள்விக்குறி: எஸ்டிபிஐ கட்சி கடும் கண்டனம்



சென்னை, ஏப்.15
எஸ்டிபிஐ கட்சி மாநில தலைவர் நெல்லை முபாரக் நேற்று வெளியிட்ட அறிக்கை: இந்தியாவிலிருந்து தனியார் ஹஜ் சர்வீஸ் மூலம் இந்த ஆண்டு (2025) புனித ஹஜ்கடமையாற்ற, சவுதி அரசாங்கம் 52,000 இந்தியர்களுக்கு ஒதுக்கீடு வழங்கியிருந்தது. இதற்காக, தமிழகம் உள்ளிட்ட இந்தியாவின் பல்வேறு மாநிலங்களைச் சேர்ந்த 52,000 ஹாஜிகள், பல்வேறு தனியார் ஹஜ் சர்வீஸ் நிறுவனங்களின் மூலமாக தலா 6 லட்சம் முதல் 8 லட்சம் ரூபாய் வரை செலுத்தி, நிர்ணயிக்கப்பட்ட காலக்கெடுவில் பதிவு செய்தனர். தனியார் ஹஜ் சர்வீஸ் நிறுவனங்கள், ஹாஜிகளிடமிருந்து வசூலிக்கப்பட்ட கட்டணத்தை ஒன்றிய சிறுபான்மை நலத்துறை மற்றும் சவுதி அரசாங்கத்தின் வழிகாட்டுதலின்படி முறையாக அனுப்பியிருந்தன.

இந்நிலையில், சவுதி அரேபியாவின் ஹஜ் மற்றும் உம்ரா அமைச்சகம், மினா பள்ளத்தாக்கில் இந்திய தனியார் ஹஜ் சர்வீஸ்களுக்கு ஒதுக்கப்பட்டிருந்த தங்குமிட மண்டலங்களை ரத்து செய்து, அவற்றை மற்ற நாடுகளுக்கு மறு ஒதுக்கீடு செய்துள்ளது. இதன் விளைவாக, 52,000 இந்திய ஹஜ் யாத்ரீகர்களுக்கு மினாவில் தங்குமிடம் உறுதி செய்யப்படாத நிலை ஏற்பட்டுள்ளது. இது அவர்களின் ஹஜ் யாத்திரையை கேள்விக்குறியாக்கியுள்ளது. ஆகவே, ஒன்றிய அரசு இந்த விவகாரத்தில் உடனடியாக தலையிட்டு அவசர நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும். தமிழக அரசும் இந்தப் பிரச்னையில் தீவிர கவனம் செலுத்தி, யாத்ரீகர்களுக்கு உதவ வேண்டும்.

# பிள்ளையார்பட்டி கற்பகவிநாயகர் கோவிலில் தீர்த்தவாரி உற்சவம்



திருப்பத்தூர், ஏப்.15
சிவகங்கை மாவட்டம் திருப்பத்தூர் அருகே பிள்ளையார்பட்டியில் பிரசித்தி பெற்ற கற்பகவிநாயகர் கோவில் உள்ளது. இந்த கோவிலில் இன்று (திங்கட்கிழமை) தமிழ்ப் புத்தாண்டை முன்னிட்டு அதிகாலை 5 மணியளவில் நடைதிறக்கப்படும். பின்னர் கற்பக விநாயகருக்கு சிறப்பு அபிஷேகம் செய்யப்பட்டு தீபாராதனை காண்பிக்கப்படும்.

தொடர்ந்து மூலவர் அருகில் வெள்ளி மூஷிக வாகனத்தில் உற்சவர் கற்பகவிநாயகர் எழுந்தருளி பக்தர்களுக்கு காட்சியளிப்பார். காலை 9 மணிக்கு மேல் கோவில் திருக்குளத்தில் அங்குச தேவர் மற்றும் அஸ்திர தேவர் எழுந்தருளல் நிகழ்ச்சியும், தொடர்ந்து தீர்த்தவாரி உற்சவம் நிகழ்ச்சியும் நடக்கிறது.

மாலை 6 மணிக்கு மேல் கோவிலில் பஞ்சாங்கம்வாசிக்கும்நிகழ்ச்சியும் தொடர்ந்து மூஷிக வாகனத்தில் கற்பகவிநாயகரும், ரிஷப வாகனத்தில் சந்திரசேகர் கவுரி அம்பாளுடனும் எழுந்தருளி சிறப்பு ஆராதனையுடன் கோவில் உட்பிரகாரத்தில் எழுந்தருளல் நிகழ்ச்சி நடக்கிறது.

கோவில் நிர்வாகம் சார்பில் பக்தர்களுக்கு அன்னதானம், குடிநீர் வசதி, மருத்துவ வசதி, பக்தர்கள் நிழலில் நின்று வரிசையாக சென்று சாமி கும்பிடும் வகையில் மேற்கூரைகள் வசதி அமைக்கப்பட்டுள்ளது.

மேலும் வெளி மாவட்டங்களில் இருந்து கார், வேன் உள்ளிட்ட வாகனங்களில் வரும் பக்தர்களின் வசதிக்காக கார் பார்க்கிங் வசதியும் செய்யப்பட்டுள்ளது.

இதற்கான ஏற்பாடுகளை கோவில் பரம்பரை டிரஸ்டிகள் நற்சாந்துபட்டி குமரப்பன் செட்டியார், காரைக்குடி சித.பழனியப்பன் செட்டியார் ஆகியோர் செய்துள்ளனர்.

# கிருஷ்ணா கால்வாயில் இருந்து ஜீரோ பாயின்டிற்கு நீர்வரத்து 316 கன அடியாக அதிகரிப்பு



சென்னை, ஏப்14
சென்னை மக்களின் குடிநீர் தேவைக்காக, ஒவ்வொரு ஆண்டும் தெலுங்கு கங்கா நதிநீர் ஒப்பந்தப்படி 15 டிஎம்சி தண்ணீர் வழங்க வேண்டும். இதில், 3 டிஎம்சி சேதாரம் போக, ஜூலை முதல் அக்டோபர் வரை 8 டிஎம்சியும், ஜனவரி முதல் ஏப்ரல் வரை 4 டிஎம்சியும் என 12 டிஎம்சி தண்ணீர் வழங்க வேண்டும். ஆந்திர அரசின் நீர்வளத்துறை அதிகாரிகள் கடந்த ஜனவரி மாதம் திறக்க வேண்டிய தண்ணீரை தமிழகத்திற்கு திறக்காததால், தமிழகஅரசின்நீர்வளத்துறை அதிகாரிகள் ஆந்திர பொதுப்பணித்துறை அதிகாரிகளுக்குதமிழகத்திற்கு தண்ணீர் திறக்க வேண்டும் என கடிதம் எழுதினர்.

இதையடுத்து, தமிழக அதிகாரிகளின் கோரிக்கையை ஏற்று கடந்த மாதம் 24ம் தேதி வினாடிக்கு 500 கன அடி வீதம் தண்ணீர் திறக்கப்பட்டது. பின்னர், கண்டலேறுவில் திறக்கப்பட்ட தண்ணீர் 152 கி.மீ கடந்து தமிழக எல்லையான ஊத்துக்கோட்டை தாமரைக்குப்பம் ஜீரோ பாயிண்டிற்கு கடந்த மாதம் 28ம் தேதி வந்தடைந்தது.

இந்நிலையில், கண்டலேறு அணையில் கூடுதலாக 300 கன அடி வீதம் 800 கன அடியாகவும், பின்னர் படிப்படியாக உயர்த்தி தற்போது 1,340 கன அடியாகவும் தண்ணீர் திறக்கப்பட்டது. இந்த தண்ணீர் தமிழக எல்லையான ஊத்துக்கோட்டை ஜீரோ பாயிண்டிற்கு கடந்த வாரம் 290 கன அடியாகவும், தற்போது 316 கன அடியாகவும் தண்ணீர் அதிகரித்து வந்து கொண்டிருக்கிறது.

# 'நாங்கள்' திரைப்பட விமர்சனம்




நாங்கள்திரைப்படத்தினை,'கலாபவஸ்ரீகிரியேஷன்ஸ்'நிறுவனம் சார்பில், ஜிவிஎஸ் ராஜு தயாரித்துள்ளார். இயக்குனர் அவினாஷ் பிரகாஷ் எழுதி இயக்கியிருப்பதோடு, ஒளிப்பதிவினையும் மேற்கொண்டுள்ளார். இந்த படம் பல சர்வதேச திரைப்பட விழாக்களில் பாராட்டுகளையும், விருதுகளையும் பெற்றுள்ளது. வேத் ஷங்கர் சுகவனம் இசையமைத்துள்ளார்.

இந்த நிலையில், இயக்குனர் அவினாஷ் பிரகாஷ் இயக்கிய 'நாங்கள்' திரைப்படம் எப்படி இருக்கிறது என்பதை காண்போம்.

ஊட்டியில் தனியார் பள்ளி நடத்தி வருபவரான அப்துல் ரபே, கருத்து வேறுபாடு காரணமாக மனைவியை பிரிந்து வாழ்கிறார். தனது மூன்று ஆண் குழந்தைகளையும் மிகவும் கண்டிப்பாக வளர்க்கிறார். சிறிய தவறு நடந்தாலும் கடுமையான தண்டனைகளை கொடுக்கிறார். தந்தையின் மிரட்டலுக்கு பயந்து வேலையாட்கள் போல நடந்து கொள்ளும் குழந்தைகள், ஒருகட்டத்தில் வெகுண்டு எழுகிறார்கள். கேரளாவில் உள்ள தாய் பிரார்த்தனாவிடம் செல்கிறார்கள்.

ஆனால் தாயின் கஷ்டத்தை உணர்ந்து மீண்டும் தந்தையிடம் திரும்புகிறார்கள். மகன்களின் எதிர்காலத்துக்காக சில முடிவுகளை தைரியமாக அப்துல் ரபே எடுக்கும்போது பிரார்த்தனா வந்து சேருகிறார். அப்துல் ரபே தனது மனைவியை ஏற்றுக்கொண்டாரா? குழந்தைகளுக்காக அவர் எடுக்கும் முடிவுகள் என்ன? என்பதே மீதி கதை.

கண்டிப்பானதந்தையாக படம் முழுக்க அராஜகமான நடிப்பை வழங்கியுள்ளார், அப்துல் ரபே. குழந்தைகளை அடிக்கும் காட்சிகளில் அவரது சைக்கோதனமான நடிப்பு குரூரம். அழுகையும், ஏமாற்றமுமாக பிரார்த்தனா இயல்பான நடிப்பால் கவருகிறார். அப்துல் ரபேவின் மகன்களாக மிதுன், ரித்திக், நிதின் ஆகியோரின் அப்பாவித்தனமான நடிப்பு ஆச்சரியம் தருகிறது. அப்பாவிடம் அடிவாங்கி வந்த அவர்கள், ஒருகட்டத்தில் திமிறி எழுவது திருப்பம். சோகமான காட்சிகளை மட்டும் கருப்புவெள்ளையில் காட்டி அவினாஷ் பிரகாஷ் ஒளிப்பதிவில் புதுமை செய்துள்ளார். வேத் சங்கரின் இசை படத்துடன் ஒன்ற வைக்கிறது.

எதார்த்தமான நடிப்பு படத்துக்கு பலம். நாடகத்தனமான காட்சிகள் பலவீனம். மனைவியை பிரிந்து வாழும் ஒரு கண்டிப்பானதந்தையிடம்வளரும்குழந்தைகள்வாழ்க்கையைஎவ்வாறுகற்றுக்கொள்கிறார்கள்?என்பதைஉணர்ச்சிகளின் அடிப்படையில் திரைக்கதையாக வடிவமைத்து கவனிக்க வைத்துள்ளார், இயக்குனர் அவினாஷ் பிரகாஷ்.

# பக்ரைன் பார்முலா 1 கார்பந்தயம்: ஆஸ்திரேலிய வீரர் பியாஸ்ட்ரி முதலிடம்



இந்த ஆண்டுக்கான பார்முலா1 கார்பந்தயம் உலகம் முழுவதும் 24 சுற்றுகளாக நடத்தப்படுகிறது. இதன் 4வது சுற்றான பக்ரைன் கிராண்ட்பிரி போட்டி அங்குள்ள சாகிர் ஓடுதளத்தில் நேற்று நடந்தது. பந்தய தூரம் 308.238 கிலோமீட்டராகும். இதில் 10 அணிகளைச் சேர்ந்த 20 வீரர்கள் இலக்கை நோக்கி மின்னல் வேகத்தில் சீறிப்பாய்ந்தனர்.

முதல் வரிசையில் இருந்து புறப்பட்ட மெக்லரன் அணி வீரரான ஆஸ்கர் பியாஸ்ட்ரி (ஆஸ்திரேலியா) 1 மணி 35 நிமிடம் 39.435 வினாடிகளில் இலக்கை கடந்து முதலிடம் பிடித்து அதற்குரிய 25 புள்ளிகளை தட்டிச்சென்றார். இந்த சீசனில் அவர் பெற்ற 2வது வெற்றி இதுவாகும். அவரைவிட 15.499 வினாடிகள் பின்தங்கிய இங்கிலாந்து வீரர் ஜார்ஜ் ரஸ்செல் (மெர்சிடஸ் அணி) 2வது இடம் பிடித்தார். இங்கிலாந்து வீரர் லான்டோ நோரிஸ் (மெக்லரன் அணி) 3வது இடத்தை பெற்றார். நடப்பு சாம்பியனான நெதர்லாந்து வீரர் வெர்ஸ்டப்பென் (ரெட்புல் அணி) 6வது இடத்துக்கு தள்ளப்பட்டார்.

இதுவரை நடந்துள்ள 4 சுற்றுகள் முடிவில் லான்டோ நோரிஸ் 77 புள்ளிகளுடன் முதலிடத்திலும், பியாஸ்ட்ரி 74 புள்ளிகளுடன் 2வது இடத்திலும் உள்ளனர். இதன் 5வது சுற்று போட்டி சவுதி அரேபியாவில் வருகிற 20ந் தேதி நடக்கிறது.

# கரண் சர்மா அபாரம்: டெல்லி அணியின் தொடர் வெற்றிக்கு முற்றுப்புள்ளி வைத்த மும்பை

ஐ.பி.எல். தொடரில் இன்று இரவு நடைபெற்ற ஆட்டத்தில் டெல்லி கேப்பிடல்ஸ் மும்பை இந்தியன்ஸ் அணிகள் மோதின. அருண்ஜெட்லி மைதானத்தில் நடைபெற்று வரும் இந்த போட்டியில் டாஸ் வென்ற டெல்லி அணியின் கேப்டன் அக்சர் படேல் பந்துவீச்சை தேர்வு செய்தார்.

அதன்படி முதலில் பேட்டிங் செய்த மும்பை அணியின் தொடக்க ஆட்டக்காரர்களாக ரோகித் சர்மா ரிக்கல்டன் களமிறங்கினர். நடப்பு சீசனில் தொடர்ந்து சொதப்பி வரும் ரோகித் சர்மா இந்த ஆட்டத்திலாவது அசத்துவாரா? என்று எதிர்பார்த்து காத்திருந்த ரசிகர்களுக்கு ஏமாற்றமே மிஞ்சியது. 18 ரன்களில் ஆட்டமிழந்து மீண்டும் ஏமாற்றினார். அடுத்து சூர்யகுமார் யாதவ் களமிறங்கினார். மறுமுனையில் அதிரடியாக ஆடி வந்த ரிக்கல்டன் 41 ரன்களில் ஆட்டமிழந்தார். இதனையடுத்து ஜோடி சேர்ந்த சூர்யகுமார் யாதவ் திலக் வர்மா கூட்டணி அதிரடியாக விளையாடி மும்பை அணிக்கு வலு சேர்த்தது. இந்த ஜோடி 60 ரன்கள் பார்ட்னர்ஷிப் அமைத்த நிலையில் பிரிந்தது. சூர்யகுமார் யாதவ் 40 ரன்களில் ஆட்டமிழந்தார். அடுத்து வந்த கேப்டன் ஹார்திக் பாண்ட்யா 2 ரன்களில் நடையை கட்டினார். பின்னர் களமிறங்கிய நமன் திரும் அதிரடியாக விளையாட மும்பை வலுவான இலக்கை நோக்கி பயணித்தது. சிறப்பான ஆட்டத்தை வெளிப்படுத்திய திலக் வர்மா 59 ரன்களில் ஆட்டமிழந்தார்.

பின்னர் நிர்ணயிக்கப்பட்ட 20 ஓவர்கள் முடிவில் மும்பை 5 விக்கெட்டுகளை இழந்து 205 ரன்கள் அடித்தது. நமன் திர் 38 ரன்களுடனும், வில் ஜாக்ஸ் ஒரு ரன்னுடனும் களத்தில் இருந்தனர். டெல்லி தரப்பில் குல்தீப் யாதவ் மற்றும் விப்ராஜ் நிகாம் ஆகியோர் தலா 2 விக்கெட்டுகளை வீழ்த்தினர்.

இதனையடுத்து 206 ரன்கள் அடித்தால் வெற்றி என்ற வலுவான இலக்குடன் டெல்லி அணியின் சார்பில் ஜாக் பிரசர்மற்றும்அபிஷேக்போரேல் ஆகியோர்களமிறங்கினர். ஆரம்பமே டெல்லி அணிக்கு அதிர்ச்சியாக அமைந்தது. அந்த அணியின் ஜாக் பிரசர் முதல் பந்திலே கேட்ச் ஆகி வெளியேறினார்.

அடுத்ததாக அபிஷேக் போரலுடன், கருண் நாயர் ஜோடி சேர்ந்தார். இந்த ஜோடியில் கருண் நாயர் தனது அதிரடி ஆட்டத்தால் மும்பை அணியின் பந்துவீச்சை துவம்சம் செய்தார். தொடர்ந்து சிறப்பாக ஆடிய அவர் 22 பந்துகளில் தனது அரைசதத்தை பதிவு செய்து அசத்தினார்.

தொடர்ந்து அதிரடி காட்டிய இந்த ஜோடியால், அணியின் ரன்ரேட் வேகமாக உயர்ந்தது. அடுத்ததாக கருண் நாயருடன், கே.எல்.ராகுல் ஜோடி சேர்ந்தார். பின்னர் சதம் அடிப்பார் என்று பெரிதும் எதிர்பார்க்கப்பட்ட கருண் நாயர் 89 (40) ரன்களில் போல்ட் ஆகி வெளியேறினார்.

அடுத்து களமிறங்கிய அக்சர் பட்டேல் 9 ரன்னும், ஸ்டப்ஸ் 1 ரன்னும், கே.எல்.ராகுல் 15 ரன்களும், விப்ராஜ் நிகம் 14 ரன்களும், அசுதோஷ் சர்மா 17 ரன்களும், குல்தீப் யாதவ் 1 ரன்னும், மொகித் சர்மா (0) ரன் ஏதும் எடுக்காமல் அடுத்தடுத்து ஆட்டமிழந்தனர். இறுதியில் டெல்லி அணி 19 ஓவர்களில் அனைத்து விக்கெட்டுகளையும் இழந்து 193 ரன்கள் எடுத்தது. மும்பை அணியின் சார்பில் சிறப்பாக பந்து வீசிய கரண் சர்மா 3 விக்கெட்டுகளும், மிட்செல் சாண்ட்னர் 2 விக்கெட்டுகளும், பும்ரா மற்றும் தீபக் சாஹர் ஆகியோர் தலா ஒரு விக்கெட்டும் வீழ்த்தினர்.

இதன்மூலம் டெல்லி அணிக்கு எதிரான போட்டியில் 12ரன்கள் வித்தியாசத்தில் மும்பை அணி திரில் வெற்றிபெற்றது. இதன்படி மும்பை அணி நடப்பு ஐ.பி.எல் தொடரில் 4 புள்ளிகளுடன் 2வது தொடர் வெற்றியை பதிவு செய்து, புள்ளிபட்டியலில் 7வது இடத்திற்கு முன்னேறி உள்ளது. டெல்லி அணி புள்ளிபட்டியலில் இரண்டாம் இடத்திற்கு தள்ளப்பட்டது.

# நடிகர் மணிகண்டனை பாராட்டிய சிபி சத்யராஜ்



தமிழ் சினிமாவில் 'ஜெய் பீம், லவ்வர், குட் நைட்' போன்ற படங்களில் நடித்து பிரபலமானவர் மணிகண்டன். இவரது நடிப்பில் கடந்த ஜனவரி மாதம் 24ந் தேதி வெளியான படம் 'குடும்பஸ்தன்'. இப்படத்தை சினிமாக்காரன் நிறுவனம் தயாரிப்பில் நக்கலைட்ஸ் யூடியூப் இயக்குனர் ராஜேஷ்வர் காளிசாமி இயக்கியிருக்கிறார். இந்த படத்தில் மணிகண்டன் உடன் இணைந்து சான்வி மேக்னா, குரு சோமசுந்தரம், ஆர்சுந்தர்ராஜன் ஆகியோர் முக்கிய கதாபாத்திரங்களில் நடித்திருக்கின்றனர். இந்த படத்திற்கு வைஷாக் இசையமைத்துள்ளார்.

மக்களால் கொண்டாடப்பட்டு மாபெரும் அளவில் வெற்றியடைந்துள்ள குடும்பஸ்தன் திரைப்படம் 75வது நாளை கடந்து வெற்றிநடை போட்டு வருகிறது.. இப்படம் உலக அளவில் சுமார் ரூ.30 கோடிக்கும் அதிகமாக வசூல் செய்துள்ளதாக தகவல் வெளியாகி உள்ளது. இப்படம் ஜீ5 ஓ.டி.டி தளத்தில் வெளியானது.

இப்படத்தின் கதையை முதலில் கேட்டது நடிகர் அசோக் செல்வன் தான், ஆனால் அவருக்கு கால்ஷீட் இல்லாத காரணத்தினால், இப்படத்தில் மணிகண்டனை நடிக்க சிபாரிசு செய்தார். இந்த நிலையில், குடும்பஸ்தன் திரைப்படத்தை அசோக் செல்வன் மட்டுமல்ல வேறொரு நடிகரும் மிஸ் செய்துள்ளார். அவர் வேறு யாருமில்லை நடிகர் சிபி சத்யராஜ்

இதுகுறித்து அவரே சமீபத்திய பேட்டி ஒன்றில் வெளிப்படையாக பேசியுள்ளார். இதில் "சமீபத்தில் குடும்பஸ்தன் படம் பார்த்தேன். அந்தக் கதை எனக்கும் வந்தது. சில காரணங்களால் அந்தப் படம் மிஸ் ஆயிடுச்சு. ஆனா, அந்த படம் பார்க்கும்போது, கோயம்புத்தூர் பாஷை என்பதை எல்லாம் தாண்டி, அந்த கதாபாத்திரத்தை மணிகண்டன் பண்ண அளவுக்கு வேற யாரும் பண்ணியிருக்க முடியாது. எனக்கு படம் பார்க்கும் போது, அவங்க பேசுற பாஷை எல்லாம் எனக்கு ஊருக்கு போயிட்டு வந்த ஒரு பீல் இருந்தது" என கூறியுள்ளார்.

# குபேரா படத்தின் முதல் பாடல் அப்டேட் கொடுத்த படக்குழு

தமிழ் சினிமாவில் முன்னணி நடிகரான தனுஷ், 'ராயன்' படத்தின் வெற்றியை தொடர்ந்து 'இட்லி கடை' படத்தை இயக்கி நடித்து வருகிறார். இப்படம் அக்டோபர் 1ம் தேதி வெளியாகிறது. மேலும் சேகர் கம்முலா இயக்கத்தில் 'குபேரா' படத்திலும் நடித்து வருகிறார். ஸ்ரீவெங்கடேஸ்வரா சினிமாஸ் தயாரிக்கும் இப்படம் தமிழ், தெலுங்கு, இந்தி, கன்னடம் மற்றும் மலையாளம் ஆகிய மொழிகளில் வெளியாக உள்ளது.

இந்தப் படத்தின் கதாநாயகியாக ராஷ்மிகா மந்தனா நடிக்க, தெலுங்கு முன்னணி நடிகர் நாகார்ஜுனா முக்கிய கதாபாத்திரத்தில் நடிக்கிறார். தேவி ஸ்ரீபிரசாத் இசையமைக்கிறார். இப்படம் வருகிற ஜூன் மாதம் 20ம் தேதி திரையரங்குகளில் வெளியாக உள்ளது.

இந்நிலையில், இப்படத்தின் முதல் பாடலுக்கான அப்டேட்டை படக்குழு வெளியிட்டுள்ளது. அதன்படி, விரைவில் முதல் பாடல் வெளியாகும் என்று தெரிவித்துள்ளது.

NAMADHU DHINA KANI
Canara Bank
Account: 120028528266
IFSC code: CNRB0001041

Printed by KANIRAJA V. published by KANIRAJA V. on behalf of NAMADHU DHINA KANI TAMIL DAILY and printed at SEAMAN GRAPHICS No. 7/253, KVN puram 2 2nd street, KilpaukGarden, Chennai 600010. and published at No.28, Thalikattipalayam, Kaithamalai Road, Uttukuli, Tiruppur - 638751. Editor: KANI RAJA V.